# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி, B.A.,D.Com., B.L.,**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து துறைத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 1113 / 2014 / எம்சி. 8 நாள் : 13.02.2014**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்றக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **17.02.2014** திங்கள்கிழமை பிற்பகல் **2.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - பிப்ரவரி 2014

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் | |
| ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | பொது சுகாதார பிரிவு - சிறப்பு தூய்மைக்குழு அமைக்கப்பட்டது – ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | வடக்கு மண்டலம், வார்டு எண்.38, விளாங்குறிச்சி கிராமம், நேஷனல் மாடல் பள்ளி எதிர்புறம் 'CC' 40 அடி திட்ட சாலை அமைத்தல் - திருத்தியமைக்கப்பட்ட மாற்று திட்டசாலை வரைபடத்தை உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் நகர் ஊரமைப்பு துறை ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்புதல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - 11 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 21 – முத்தண்ணன் குளத்தின் ஓரத்தில் பாதுகாப்பு தடுப்பு வசதிகள் செய்தல்- மதிப்பீடு 72.60 இலட்சம் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 5 | பொது சுகாதாரம் – பொங்கல் பண்டிகையை முன்னிட்டு துப்புரவுப் பணியாளர்களுக்கு பொங்கல் பொருட்களுக்கான தொகை வழங்கியது - மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டது – கூடுதல் செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | பொது சுகாதாரம்- சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையை சிசேரியன் அறுவை சிகிச்சை மையமாக மாற்றுதல் -கருவுற்ற தாய்மார்களுக்கு IMA இரத்த வங்கியில் இரத்தம் பெற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 7 | பொது சுகாதாரம் - திறந்த வெளிகளில் கழிப்பிடமான பயன்படுத்துவதை ஒழித்தல் - விழிப்புணர்வு முகாம்களை தனியார் மூலம் இலவசமாக நடத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 8 | பொது சுகாதாரம் – சுவர்ண ஜெயந்தி திட்டம் - நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் 2012-13 தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 9 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 79 - தடாகம் ரோடு AA ஸ்கீம் ரோடு கடை எண் 2 – உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 70 – புலியகுளம் ரோடு சிறுகாளியம்மன் கோவில் வீதி தரை தளம் கடை எண் 1 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 80 – ராஜவீதி கார் பார்க்கிங் - மாநகராட்சி வணிக வளாகம் கடை எண் 2 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - ஒப்பணக்கார வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி எதிரிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண்.1 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் வார்டு எண்.50 - டாடாபாத் ராஜு ரோடு வணிக வளாகத்தில் உள்ள கடைஎண்.16- கூடலூர் கவுண்டம்பாளையம் கருப்பட்டி உற்பத்தியாளர் வட்டுறவு சங்கத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 14 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.51 சீனிவாபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள வணிக வளாக கடை எண்.1-ஐ மூன்றாண்டுகள் முடிந்தபின் புதுப்பிக்க விருப்பமின்மையை தொடர்ந்து செலுத்திய முன் வைப்பு தொகைகளை வாடகைக்கு ஈடுகட்டி மீதம் உள்ள தொகையை வழங்குவது மற்றும் கடையின் உரிமம் ரத்து செய்து மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 15 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.54 - மத்திய பேருந்து நிலையம் மற்றும் வார்டு எண்.82 உக்கடம் பேருந்து நிலையங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் நிறுவனத்திற்கு பேருந்துகளின் இயக்கங்களை கண்காணிக்க கூண்டு அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தது – வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 16 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண். 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வணிக வளாகத்தில் மாற்று திறனாளிகளுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகள் - கடை எண்.4 மற்றும் 5 - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 17 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72-ல் மாரியப்பன் வீதியிலுள்ள மாநகராட்சி காலி இடத்தை நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடமாக மாற்றி 2014-2017-ம் ஆண்டிற்கான பொது ஏலத்தில் சேர்த்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 18 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு 72- வ.உ.சி மைதானம் வ.உ.சி விளையாட்டு திடல் மற்றும் உயிரியல் பூங்கா ஆகிய இடங்களில் உள்ள தள்ளுவண்டி மற்றும் தரைகடைகளில் உணவு பொருட்கள், விளையாட்டு பொருட்கள் விற்பனை செய்பவர்களுக்கு வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 19 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - வார்டு எண். 81 - ஒப்பணக்கார வீதி கடை எண்.1,2,3 மற்றும் 9 & வார்டு எண்.83-ல் முத்துவிநாயகர் கோயில் வீதி கடை எண்.12 மாநகராட்சி வணிக வளாகம் கடைகள் 13.11.2013-ல் பூட்டப்பட்டது - உரிமதாரர் செலுத்திய தொகைகளை பறிமுதல் செய்து அக்கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 20 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - வார்டு எண்.72 மத்திய மண்டலத்திற்குட்பட்ட திரு.வி.க..மாநகராட்சி வணிக வளாகத்தில் கடை எண்.7, 8 மற்றும் 3, 4ம் (நான்கு கடைகள்) வாடகை செலுத்தாத காரணத்தால் 23.11.2013 மற்றும் 04.12.2013 அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - உரிமதாரர்கள் செலுத்திய தொகையை பறிமுதல் செய்து மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 21 | மத்திய மண்டலம் - வார்டு.71 - பழைய தெற்கு மண்டல அலுவலகத்தின் தரைதளத்தை உதவி இயக்குநர் அலுவலக பயன்பாட்டிற்கும், மேல் தளத்தை மாவட்ட ஊராட்சி மன்ற திட்டக்குழு அலுவலக பயன்பாட்டிற்கும் ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 22 | வருவாய் பிரிவு -கிழக்கு மண்டலம்- வார்டு எண் 57- மசக்காளிபாளையம் பகுதியிலுள்ள வணிக வளாகக் கடை எண் 8- உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 23 | வருவாய் பிரிவு -கிழக்கு மண்டலம்- சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். வார்டு எண் 69, இராமநாதபுரம் பகுதியிலுள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்- உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 24 | வருவாய் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 31 சரவணம்பட்டி விளாங்குறிச்சி சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடை எண் 3 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 25 | வருவாய் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 28 சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைஎண் 1 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 26 | வருவாய் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 - துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகள் 2, 3, 4, 6- உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 27 | வருவாய் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 - துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் 2,8,10,11- உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 28 | வருவாய் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 28 சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடை எண் 2 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 29 | வருவாய் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 செங்காடு பகுதியில் முதல் தளத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள எண் 4, 5 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | வருவாய் பிரிவு -வடக்கு மண்டலம் - வார்டு எண் 1 - துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடை எண் 5, 8, 9, 10 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 31 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - வார்டு எண்.72 - நேரு ஸ்டேடியம் எதிர்புறமுள்ள மாநகராட்சி காலி இடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை வார விழாவிற்கு ஒதுக்கீடு செய்தது – கட்டணம் செலுத்தக் கோரியது – வாடகைத் தொகையினை குறைக்கக் கோரியது - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 32 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - 9 குத்தகை இனங்கள் - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 33 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - வார்டு எண்.82-ல் பிரதான அலுவலக வளாகத்திலுள்ள அம்மா மூலிகை உணவகத்திற்கு வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 34 | வருவாய் பிரிவு -மத்திய மண்டலம் - வார்டு எண்.54 - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண்.4ஜ தவிர்) கட்டணம் வசூலிக்கும் உரிமம் - திரு.இரா. செந்தில்வேல் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – ஏலத்தொகை செலுத்தாததால் ஏலத்தொகைகளை பறிமுதல் செய்து மறு ஏலம் கொண்டுவருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 35 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண்.23-ல் D.B ரோடு வணிக வளாக கடை எண்.12- திரு.எம்.ஆர்.பாலு என்பவர் பெயரிலிருந்து திருமதி.நீலம்நந்தா பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது- கடையை 15 வருடங்களாக உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதால் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் கொண்டு வருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 36 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர்.மொத்த காய்கறிமார்க்கெட் நவீன கட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 37 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் மேடை கடைகள் எப் 72 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 38 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண்.23- திருவேங்கடசாமி சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 39 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண்.23 - D.B. ரோடு வணிக வளாக கடை எண்.6 திருமதி.நீலம்நந்தா என்பவர் பெயரிலிருந்து திரு.T.பாலாஜி பெயருக்கு பெயர்மாற்றம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக. |
| 40 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண். 24 - மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் தெற்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (கடை எண். 1-7, 11-20, 22-36)- உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 41 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண் 5- கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக் நகர் கிழக்கு பகுதி கடை எண் 6 முதல் 10 வரை ) உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 42 | வருவாய் பிரிவு -மேற்கு மண்டலம் - வார்டு எண்.23- திருவேங்கடசாமி சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடை எண் 6 - வார்டு எண். 24 - மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் 15, 18, 32, 33 - வார்டு எண் 5- கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக் நகர் கிழக்கு பகுதி கடை எண் 9 - உயர்ந்தபட்ச ஏலதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 43 | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் வார்டு 71 - புலியகுளம் திருமண மண்டபத்தை உதவி இயக்குநர் நில அளவை பதிவேடுகள் துறைக்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 44 | பொறியியல் பிரிவு – மேட்டுப்பாளையம் சாலை – சாயிபாபா காலனி சந்திப்பு முதல் வடக்காக கவுண்டம்பாளையம் வரை நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் அமைத்தல் – மதிப்பீடு ரூ. 74.90 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 45 | பொறியியல் பிரிவு – மேட்டுப்பாளையம் சாலை – கவுண்டம்பாளையம் முதல் வெள்ளக்கிணறு பிரிவு சந்திப்பு வரை நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் அமைத்தல் – மதிப்பீடு ரூ. 74.90 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 46 | பொறியியல் பிரிவு – மேட்டுப்பாளையம் சாலை – வெள்ளக்கிணறு பிரிவு சந்திப்பு முதல் துடியலூர் சந்திப்பு வரை நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் அமைத்தல் – மதிப்பீடு ரூ. 74.90 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 47 | பணியமைப்பு – **27.03.2014** முதல் **29.03.2014** முடிய "**Earth Hour City Challenge 2014**" அமைப்பினரால் நடத்தப்பட உள்ள கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 48 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டல பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றும் பணிக்கு வாடகை அடிப்படையில் டிப்பர் லாரிகள் அமர்த்துதல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 49 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 23 – மேற்கு திருவேங்கடசாமி சாலையில் உள்ள வணிக வளாகத்தில் முதல் மாடி கூடுதல் கடைகள் கட்டுதல் - வார்டு எண் 5 – மேட்டுப்பாளையம் சாலை சேரன் நகர் மூன்றாவது வீதியில் வணிக வளாகத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கடைகள் கட்டுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 50 | பொறியியல் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண் 84 – கெம்பட்டி காலனி மாநகராட்சி பள்ளிக்கு பின்புறம் உள்ள இடத்தில் ஆதரவற்றோர் தங்கும் விடுதி கட்டுதல் - மதிப்பீடு ரூ. 75,00,000- நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 51 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. செல்வி கிறிஸ்டினாள், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், மேற்கு மண்டலம் அவர்கள் சேலம் மாநகராட்சிக்கு பணிமாறுதல் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 52 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு 57 – மசக்காளிபாளையம் பகுதி – பாதாள சாக்கடைப் பணி முடிவடைந்த இடங்களில் சாலைகள் அமைத்தல் - மதிப்பீடு ரூ.75.00 இலட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 53 | பொறியியல் பிரிவு - 49 தார்சாலைகள் அமைத்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 54 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டல பகுதிகளிலும் உள்ள பூங்காக்கள் போக்குவரத்து திடல் மற்றும் சாலையோரப் பூங்காக்கள் பராமரித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 55 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டல பகுதிளில் 184 சாலைகளை புதுப்பித்தல் பணி - மதிப்பீடு ரூ. 4080.45 இலட்சம் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

அ) **திருக்குறள்**

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

**(குறள் - 731)**

**விளக்கம்**

தப்பாமல் விளையும் நிலம், அறிஞர் பெருந்தகையர், தாழ்ந்து போகாது, குறைவின்றி வளரும் பொருட்செல்வம் இவை சிறப்புடைய நாட்டின் நல் உறுப்புக்கள்.

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**<u>சிறப்பு தீா்மானம் - 1</u>**

தமிழகத்தை ஒவ்வொரு துறையிலும் முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்காக அல்லும், பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மனித நேயமிக்க மாண்புமிகு தமிழக முதல்வா் நாளொரு மேனியாக, அடித்தள மக்கள், உழைக்கின்ற மக்கள் வாழ்த்து கூறுகின்ற அளவில், வருங்கால சந்ததியா்க்கு பெருமைக்கு பெருமை சோ்க்கின்ற ஆட்சியை நடத்தி உண்ண உணவிலிருந்து, உடுக்க உடையிலிருந்து இன்று அனைத்தும் நாடு சுதந்திரம் அடைந்ததற்கு பின்னா், நாட்டில் ஜனநாயக ரீதியாக, அனைத்து உரிமைகளும் கிடைப்பதற்காக பெண்ணாக இருந்து பல்வேறு வழக்குகள், சுமைகளை தாங்கிக்கொண்டு மனித நேயத்தோடு 24 மணி நேரத்தில் 20 மணிநேரம் உழைத்து ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், சிறுபான்மையினா் வாழ்வுக்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மனித நேயமிக்க தமிழக முதல்வா் புரட்சித் தலைவி அம்மா அவா்கள் 66-வது பிறந்தநாள் விழா வருகின்ற நேரத்தில் தமிழகம் எப்படி சுபிட்சமாக இருக்கின்றதோ, அதேபோன்று இந்த இந்திய நாடும் சுபிட்சமாக வருவதற்கு 66-வது பிறந்த நாளில் இந்த நாட்டினுடைய தலைமை பொறுப்பேற்று நடத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வா் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவா்களுக்கு மனமாா்ந்த வாழ்த்துக்களை சமா்ப்பித்துக் கொள்வதுடன், கோயம்புத்தூா் மாநகராட்சியின் வளா்ச்சிக்கு சிறப்பாக பல்வேறு உதவிகளை செய்ததற்கு நன்றிகளை இம்மாமன்றம் காணிக்கையாக்குகிறது என்ற சிறப்புத் தீா்மானம் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களால் கொண்டு வரப்பட்டது.

**<u>சிறப்பு தீா்மானம் - 1 நாள் 17.02.2014</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்பு தீா்மானம் - 2</u>**

மாண்புமிகு தமிழக முதல்வா் புரட்சித் தலைவி அம்மா அவா்களின் ஆணைக்கிணங்க 2013-2014 –ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு ஊரக வளா்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சா் அவா்களால் தமிழக சட்ட மன்றத்தில் அறிவிப்புகள் செய்யப்பட்ட போது வெள்ளலூா் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. வெள்ளலூா் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு இடம் இல்லாத காரணத்தால் வெள்ளலூா் - போத்தனூா் மெயின் ரோட்டில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 2 ஏக்கா் நிலத்தை பேருந்து நிலையம் அமைக்க வெள்ளலூா் பேரூராட்சிக்கு தர வேண்டும் என்று வெள்ளலூா் பேரூராட்சி நிா்வாகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே வெள்ளலூா் - போத்தனூா் மெயின் ரோட்டில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 2 ஏக்கா் நிலத்தை பேருந்து நிலையம் அமைக்க வெள்ளலூா் பேரூராட்சிக்கு கொடுக்க அரசின் அனுமதியை கோரலாம் என்ற சிறப்பு தீா்மானம் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களால் கொண்டு வரப்பட்டது.

**<u>சிறப்பு தீா்மானம் - 2 நாள் 17.02.2014</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**பொருள் எண் 1**

பொருள்: பொதுசுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறப்பு தூய்மைக்குழு அமைத்து உத்தரவிடப்பட்டது – தொடர்ந்து தூய்மைக்குழு பணிகள் நடைபெறுவது – தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சிறப்பு தூய்மைக்குழு அமைத்து உத்தரவிடப்பட்டு தொடர்ந்து நடைபெறும் தூய்மைக்குழுப் பணிகள் 15.09.2013 ல் முடிவடைந்து மேற்படி தூய்மைப் பணிகள் 16.09.2013 முதல் 09.02.2014 வரை தொடர்ந்து 100 வார்டுகளிலும் 100 நாட்கள் சுழற்சி முறையில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும் பின்னேற்புக்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

இப்பணியாளர்களின் ஒப்பந்த காலத்தை 10.02.2014 முதல் மறுஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் முன்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 3570/2012/எம்.இ,3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 373 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 2**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம், வார்டு எண்.38, விளாங்குறிச்சி கிராமம், சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.27ல் அவிநாசி சாலையை ஒட்டி நேஷனல் மாடல் பள்ளி எதிர்புறம் ‘CC’ 40 அடி திட்ட சாலை உத்தேசம் – சேமநிதி அலுவலக வளாகத்தில் இருந்து 20 அடி அகலமும், அருகில் உள்ள தனியார் மனையிடங்கள் S.F.No.3 பாகம், 30 பாகம், 29 பாகம் பகுதியில் 20 அடியும் எடுத்து திட்ட சாலையினை உத்தேசித்தல் – திருத்தி அமைக்கப்பட்ட மாற்று திட்டசாலை வரைபடத்தை உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் நகர் ஊரமைப்பு துறை ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்புதல் – மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பித்தல் – சம்பந்தமாக.

**பார்வை:** Petitions for Special Leave to Appeal (Civil) Nos.35507 – 35508/2010.உச்ச நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்பு நாள். 30.10.2013.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.38, விளாங்குறிச்சி கிராமம், சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.27ல் அவிநாசி சாலையை ஒட்டி நேஷனல் மாடல் பள்ளி எதிர்புறம் ‘CC’ 40 அடி திட்ட சாலை உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டசாலை அவிநாசி சாலையிலிருந்து 130 மீட்டர் தூரத்திற்கு 40 அடி சாலையாக விடப்பட்டுள்ளது. அதன்பின் வரும் இந்த சாலையின் தொடர்ச்சி சேமநல நிதி அலுவலக (Provident Fund Office) குடியிருப்பு வழியாக செல்வதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த குடியிருப்பு இடத்தில் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்றதால் கட்டுமானத்தை பாதிக்காமல் திட்ட சாலையை உத்தேசிக்குமாறு பார்வையில் கண்ட Petitions for Special Leave to Appeal (Civil) Nos.35507 – 35508/2010 மூலம் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

எனவே, சேமநிதி அலுவலக வளாகத்தில் இருந்து 20 அடி அகலமும், அருகில் உள்ள தனியார் மனையிடங்கள் S.F.No.3 பாகம், 30 பாகம், 29 பாகம் பகுதியில் இருந்து 20 அடி அகலமும் எடுத்து திட்ட சாலையினை உத்தேசிக்க வேண்டியுள்ளது. மாற்று திட்டச்சாலை பிரேரணையை உள்ளூர் திட்டக் குழுமத்தின் மூலம் நகர் ஊரமைப்புத் துறை ஆணையருக்கு அனுப்பி ஒப்புதல் பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 1147/2014/எம்.எச்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 374 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ் கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத் தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **4032/ 2013/ எம் டி4** | வார்டு எண் **14** க்குட்பட்ட கோவில்மேடு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் புதியதாக அறிவியல் மற்றும் கணினி பயிற்சி வகுப்பறைகள் கட்டுதல் | **38.70** | **22.01.2014** மூன்றாம் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.71% அதிகம் | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.53% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | **5658/ 2013/ எம் டி5** | பாராளுமன்ற உறுப்பினர் நிதி , வார்டு எண்.**66** உடையாம்பாளையம் மேல்நிலைப்பள்ளியின் இரண்டாம் தளத்தில் கலையரங்கம் கட்டுதல் | **25.00** | **20.01.2014** மூன்றாம் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.90% அதிகம் | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.69% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | **4903/ 2012/ எம் டி.4** | வார்டு எண்.**81**க்குட்பட்ட சி.எம்.சி. காலனி சமுதாயக் கூடத்தில் கூடுதலாக அபிவிருத்தி பணிகள் செய்தல். | **22.30** | **20.01.2014** ஒன்பதாம் அழைப்பு | திருமதி.கே.பங்கஜம் கோயம்புத்தூர் 3.70% அதிகம் | திருமதி.கே.பங்கஜம் கோயம்புத்தூர் 3.52% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 4 | **8967/ 2013/ எம் டி2** | வார்டு எண்.**20** க்குட்பட்ட கருமலை செட்டிபாளையத்தில் புதிய சமுதாய கூடம் கட்டுதல் | **51.00** | **22.01.2014** முதலாம் அழைப்பு | 1.தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.76% அதிகம் 2. திருமதி.கே.பங்கஜம் கோயம்புத்தூர் 20.79% அதிகம் | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.50% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | **4889/ 2013/ எம் டி 4** | வார்டு எண்.**66** க்குட்பட்ட உடையாம்பாளையம் மேல்நிலைப் பள்ளியில் இரண்டாம் தளத்தில் ஆய்வுக் கூடம் கட்டுதல் | **20.50** | **20.01.2014** இரண்டாம் அழைப்பு | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.94% அதிகம் | தி/ள்.என்.பி.கே. அசோசியேட்ஸ் கோயம்புத்தூர் 4.70% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 6 | **4183/ 2013/ எம் டி5** | வார்டு எண் **9**க்குட்பட்ட வீரகேரளம் ஆனந்தம் நகர் பகுதியில் நூலகத்திற்கு படிப்பறை கட்டுதல் பணி | **5.00** | **10.01.2014** நான்காம் அழைப்பு | திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் **4.99 % அ□க□** | திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் **4.83 % அ□க□**(விலை குறைப்பிற்கு பின்) |
| 7 | **10290/ 2013/ எம் டி5** | வார்டு எண் **18**க்குட்பட்ட வீரகேரளம் சித்தி விநாயகர் காலனி சத்துணவு மையம் கட்டுதல் | **5.00** | **10.01.2014** இரண்டாம் அழைப்பு | திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் **4.99 % அ□க□** | திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் **4.83 % அ□க□**(விலை குறைப்பிற்கு பின்) |
| 8 | **10134/ 2013/ எம் டி 2** | வார்டு எண்.**46** கணபதி மாமரத்தோட்டம் பிரதான சாலை பகுதியில் சுற்றுசுவருடன் கூடிய ரேஷன் கடைகள் மற்றும் நூலகம் கட்டுதல் | **25.30** | **22.01.2014** முதலாம் அழைப்பு | 1.திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் 5.20% அதிகம் 2.திருமதி.சி.பாப்பாத்தி கோயம்புத்தூர் 7.70% அதிகம் | திரு.ஆர்.செல்வராஜ் கோயம்புத்தூர் 4.27% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 5870/ 2013/ எம் டி 2 | வார்டு எண்.19 க்குட்பட்ட வீரகேரளம் பகுதியில் கட்டப்பட்டு வரும் எரிவாயு மயானத்திற்கு கழிப்பிடம், வழிபாட்டுக் கூடம் மற்றும் கூடுதலாக LPG வாயு மூலம் தகனம் செய்யும் வசதி அமைத்தல் | 49.75 | 22.01.2014 இரண்டாம் அழைப்பு | தி/ள்.ஜெனரல் என்விரோ டெக் (பி) லிட் கோயம்புத்தூர் 5.31% அதிகம் | தி/ள்.ஜெனரல் என்விரோ டெக் (பி) லிட் கோயம்புத்தூர் 4.94% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |
| 10 | 4890/ 2013/ எம் டி 3 | கிழக்கு மண்டலம் வார்டு எண்.67 க்குட்பட்ட உள்ள இராமகிருஷ்ணாபுரம் மேல் நிலைப்பள்ளியில் கழிப்பிடம் மற்றும் ஆய்வு கூடம் கட்டுதல் | 27.50 | 22.01.2014 மூன்றாம் அழைப்பு | திரு.எஸ்.முத்துராஜா கோயம்புத்தூர் 0.13% அதிகம் | திரு.எஸ்.முத்துராஜா கோயம்புத்தூர் 0.13% அதிகம் |
| 11 | 1527/ 2011/ எம் டி 2 | வார்டு எண்.22 க்குட்பட்ட மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா மார்கெட் பகுதியில் கழிப்பிடம் கட்டுதல் | 15.00 | 20.01.2014 பனிரெண்டாவது அழைப்பு | திரு.யு.மணி கோயம்புத்தூர் 4.86% அதிகம் | திரு.யு.மணி கோயம்புத்தூர் 4.69% அதிகம் (விலை குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- இப்பணிகளுக்கு குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கு மதிப்பீட்டை விட அதிகமாக கூடுதல் சதவீதம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் மேற்படி பணிகளுக்கு பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்

ந.க.எண். 4032 /2013/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 375 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.21க்குட்பட்ட தடாகம் சாலை முதல் குறுக்கு சாலை வரை உள்ள முத்தண்ணன் குளத்தின் ஓரத்தில் பாதுகாப்பு தடுப்பு வசதிகள் அமைத்து தருமாறு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார்.

மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு ரூ72,60,000-க்கு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு நடப்பு நிதியாண்டு 2013-2014ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றகுழு கூட்டத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.110/2014எம்.டி4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 376 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

பொருள் : பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – பொங்கல் பண்டிகையை முன்னிட்டு துப்புரவுப் பணியாளர்களுக்கு பொங்கல் பொருட்களுக்கான தொகை வழங்கியது – தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளை தூய்மையாக பராமரிப்பதை கருத்தில் கொண்டு அனைத்து துப்புரவுப் பணியாளர்களுக்கும் இந்த வருடம் பொங்கல் பண்டிகையை சிறப்பான முறையில் கொண்டாடும் வகையில் மாநகராட்சியின் அனைத்து மண்டலத்திலும் பணியாற்றும் 2910 துப்புரவுப் பணியாளர்களுக்கும் தலா ரூ 250/– வீதம் சுமார் ரூ 7,27,500/– மதிப்பிலான பொங்கல் சிறப்பு பொருட்கள் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி மூலம் வாங்கி வழங்குவதற்கான மாமன்ற சிறப்பு தீர்மானம் எண் 6 நாள் 04.02.2014 ன் படி ஒப்புதல் பெறப்பட்டது.

சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடியினர் தங்கள் கேட்பு பட்டியலில் மேற்படி பொருட்கள் 2910 நபர்களுக்கும் துணிப் பைகளில் வழங்கியதால் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.8730/– ஐ சேர்த்து ரூ. 7,36,230/– க்கு காசோலை வழங்குமாறு கோரியுள்ளார்கள். எனவே மேற்படி கூடுதல் செலவினமான ரூ. 8,730/– ஐ சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடியினருக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி மாமன்றத்தாள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு : பின்னேற்பு வழங்கலாம். ந.க.எண். 184/2014/எம்.இ,3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 377 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

| | |
|---|---|
| பொருள் | சுகாதாரம்- கோயம்புத்தூர் மாநகராட்சி- சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையை – சிசேரியன் அறுவை சிகிச்சை மையமாக மாற்றுதல் - கருவுற்ற தாய்மார்களுக்கு IMA இரத்த வங்கியில் இரத்தம் பெற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள அனுமதி வேண்டுவது - தொடர்பாக. |

மாமன்ற தீர்மான எண்.211, நாள். 25.10.2013-ல் சீத்தாலட்சுமி மகப்பேறு மையத்தை சிசேரியன் அறுவை சிகிச்சை மையமாக தரம் உயர்த்தவும், அறுவை சிகிச்சைக்கு இரத்தம் தேவைப்படின் IMA இரத்த வங்கியில் இரத்தம் பெற்று சிகிச்சையை தொடங்கலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி IMA இரத்த வங்கியில் ஒரு தாய்மாருக்கு இரத்தம் வழங்க ரூ.500/- செலவாகும். இதற்கு சராசரியாக ஒரு மாதத்திற்கு 50 நபர்கள் வீதம் அறுவை சிகிச்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். ஒரு நபருக்கு ரூ.500 வீதம் 50 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.25,000/- வரை செலவாகும். ஒரு ஆண்டிற்கு ரூ.25000x12 = ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம்) வரை செலவாகும்.

எனவே, சீத்தாலட்சுமி மகப்பேறு மருத்துவமனையில் சிசேரியன் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வரும் கருவுற்ற தாய்மார்களுக்கு IMA இரத்த வங்கியில் இரத்தம் பெற ரூ.3,00,000/- செலவினத்திற்கு மாமன்ற பொருள் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் :- 7905/2013/ எம்.இ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 378 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

பொருள் :- கழிப்பிடம் - திறந்த வெளிகளில் கழிப்பிடமாக பயன்படுத்துவது – விழிப்புணர்வு முகாம் நடத்துவது – தொடர்பாக.

******

நமது கோயம்புத்தூர் மாநகராட்சி திறந்த வெளிகளில் கழிப்பிடமாக பயன்படுத்துவதை தடுக்க கடந்த சில ஆண்டுகளில் பல பெரிய முயற்சிகள் மேற்கொண்டு தொடர்ந்து அதை குறைப்பதில் வெற்றி கண்டு வருகிறது. இருப்பினும் இதை அறவே ஒழிக்க மேலும் சில விழிப்புணர்வு முகாம்களை நடத்துவது குறித்து கீழ்க்கண்ட வழிகளை கையாளலாம்.

1) பொதுக்கழிப்பிடங்கள் உள்ள பகுதிகளில் சிறுவர்கள் பெரும்பாலும் வெளிப்புற இடங்களை கழிப்பிடமாக பயன்படுத்துகிறார்கள். இவர்களின் பெற்றோர்களும் இதற்கு துணை போகிறார்கள். ஆகவே, இச்சிறுவர்கள் அதிகம் பயிலும் மாநகராட்சி பள்ளிகளில் வர்ணம் தீட்டும் போட்டிகள், சுகாதார சம்மந்தமாக செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை போன்ற கேள்வி பதில் போட்டிகள், பேச்சு போட்டிகள் நடத்துவதற்கும் அதை இறுதி செய்வதற்கும், அதற்கான பரிசு பொருட்களை தனியாரின் பங்களிப்பில் நடத்தலாம்.

2) தினசரி தேவைகளுக்கு பொதுக்கழிப்பிடங்களை பயன்படுத்தும் மக்களின் இடங்களுக்கு சென்று அவர்களின் கழிப்பிடம் சம்பந்தமான தேவைகளை கேட்டறிந்து அவர்களுக்கு உதவுவது, தனிப்பட்ட முறையில் பொது இடங்கள் அசுத்தப்படுத்துவதை தவிர்க்க அவர்களிடம் கோரிக்கை விடுப்பது, கழிப்பிடம் சுற்றிலும் சுகாதார தேவைகளை விளக்கும் போஸ்டர்களை அமைப்பது, இதற்கு மகளிர் சுய உதவிக்குழுக்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

3) கோயம்புத்தூர் மாநகராட்சி பசுமை வட்டம் (Green Circle) என்ற அமைப்பை ஏற்படுத்தி சுகாதார பாதுகாப்பு பிரதிநிதிகளாக மாணவர்களையும், இல்லத்தரசிகளையும் நியமித்து சுகாதாரத்தை பாதிக்கும் விதி மீறல்களை தடுப்பதற்கும் சுகாதாரம் சம்மந்தப்பட்ட கருத்துக்களை மக்கள் மூலம் மக்களிடம் எடுத்து செல்வதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்

4) தேவை “உங்கள் சேவை” என்ற தலைப்பில் எதிர்கால சந்ததியர்களை கருத்தில் கொண்டு 30 முதல் 45 நொடிகள் ஓடக்கூடிய சுகாதாரத்தின் அவசியத்தை உள்ளடக்கிய குறும்படம் ஒன்றை இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பல விளம்பர படங்களை இயக்கிய இயக்குனர் மதுசுதனன் மற்றும் அவரது குழுவினர்கள் மூலம் தயாரித்து மாநகராட்சி எல்லைக்குள் உள்ள திரை அரங்குகளில் திரையிடுவதற்காக நடைமுறை சாத்திய கூறுகளை பரிசீலித்து பணியினை தொடங்குவது.

5) ''உறுதி மொழி கையெழுத்து'' என்ற செயல் திட்டத்தின் மூலம் மக்கள் அதிக அளவில் சேரும் இடங்களில் வருங்கால சந்ததியர்களுக்காக, பல உயிரிழப்பிற்கு காரணமாக சுகாதார தன்மையை மனதில் கொண்டு, பொது இடங்களில் மலம் அல்லது சிறுநீர் கழிப்பதையும், குப்பைகளை பொறுப்பற்ற முறையில் வீசுவதையும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவதையும் செய்ய மாட்டேன் என உறுதி எடுத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பது.

எனவே, மேற்கண்ட வழிகளில் திறந்த வெளியை கழிப்பிடமாக பயன்படுத்துவதை அறவே ஒழிக்க் விழிப்புணர்வு முகாம்களை தனியார் மூலம் இலவசமாக நடத்துவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் எண் :- 1148/2014/ எம்.இ.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 379 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 8**

| | |
|---|---|
| பொருள்: | கோயம்புத்தூர் மாநகராட்சி சுவர்ண ஜெயந்தி திட்டம் - நகர்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம் 2012-13 தேர்வு செய்யப்பட்ட தகுதியுடைய பயனாளிகளின் பெயரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்ப்பது –தொடர்பாக. |

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி 2012-2013 - ம் ஆண்டிற்கு STEP-UP பயிற்சி அளித்தல் தொடர்பாக 30.01.2014, 31.01.2014 ஆகிய இரண்டு நாட்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை தேர்வு செய்வது தொடர்பாக அனைத்து மண்டல அலுவலகங்களிலும் முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்கள் மூலமாக பயனாளிகளை கண்டறிந்து விண்ணப்பங்கள் சேகரித்ததில் 1626 விண்ணப்பங்கள் BPL பட்டியலில் இடம் பெறவில்லை. எனவே மேற்கண்ட நபர்கள் பயன் பெறும் வகையில் 2012–2013 ம் ஆண்டிற்கான STEP –UP பயிற்சி வழங்க ஏதுவாக 1626 நபர்களை BPL பட்டியலில் சேர்க்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 6100/2012/எம்.இ. 6.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 380 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக்கூட்ட தீர்மானம் எண். 190 நாள். 12.02.2014

------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட மாதாந்திர குத்தகை இனங்களுக்கு 2014–2017 ஆண்டுக்கான பொது ஏல மின் ஏலம் 06.02.2014 அன்று நடைபெற்றது இதில் கீழ்க்கண்ட குத்தகை இனத்திற்கு அதன் எதிரே கண்டுள்ளவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ. எண் | இனம் | அரசாங்க மதிப்பு ரூ. | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் உயர்ந்தபட்ச தொகை. | மின் ஏலம் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1. | தடாகம் ரோடு AA ஸ்கீம் ரோடு கடை எண்.2 வார்டு எண்.79– 217.50 சதுர அடி. | 7850/– | ஆர்.மங்களீஸ்வரன்<br>ஆர்.தனபால் | ரூ.8200/–<br>ரூ.7900/– | –<br>7950/– |

வரிசை எண். 1 திரு.ஆர்.மங்களீஸ்வரன் என்பவர் அரசாங்க மதிப்பு ரூ.7850/–விட ரூ.8200/–க்கு ஏலம் கோரியுள்ளார். இவருக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வரி விதிப்பு மற்றும் நிதி குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுக்கூட்ட தீர்மானம் எண். 190 நாள். 12.02.2014ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 210 / 2012/ பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 381 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வணிக வளாக கடை - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – ஒப்படை செய்வது – தொடர்பாக.

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.07.02.2014.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.191 நாள்.12.02.2014.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைக்கு 06.02.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண். | இனம் | 06.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.70 புலியகுளம் ரோட்டில் சிறுகாளியம்மன் கோவில் வீதி தரை தளத்தில் கடை எண்.1 (138 சதுரடி ஒவ்வொரு கடையும்) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.5,600/- | ரூ.5,850/- திரு.V.சந்தானம் (மின்ஏலம்) |

மேற்படி இனத்திற்கு பலமுறை ஏலம் நடைபெற்றம் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. 06.02.2014 அன்று நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.1க்கு திரு.V.சந்தானம் அவர்களிடமிருந்து அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.5,600/- காட்டிலும் கூடுதலாக **ரூ.5,850/-க்கு** மின் ஏலம் பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தினை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.191 நாள்.12.02.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.9659/10/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 382 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 11

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வணிக வளாக கடை - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – ஒப்படை செய்வது – தொடர்பாக.

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.07.02.2014.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.192 நாள்.12.02.2014.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைக்கு 06.02.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 10.01.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 06.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.80-ல் ராஜவீதி கார்பார்க்கிங் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண். 2 (சதுரடி102) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.15,000/- | ரூ.15,000/- திரு.U.ராஜ்குமார் (ஒப்பந்தப்புள்ளி) | ரூ.15,400/- திரு.U.ராஜ்குமார் (மின்ஏலம்) |

மேற்படி இனத்திற்கு 06.02.2014-ல் 2-வது முறையாக நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.2-க்கு அரசு மதிப்பு ரூ.15,000/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.15,400/-க்கு திரு.U.ராஜ்குமார் அவர்களிடமிருந்து மின்ஏலம் பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தினை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.192 நாள்.12.02.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.11577/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 383 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 12

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வணிக வளாக கடை - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று – ஒப்படை செய்வது – தொடர்பாக.

பார்வை 1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.07.02.2014.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.193 நாள்.12.02.2014.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைக்கு 06.02.2014-ம் தேதி மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ.எண் | இனம் | 10.01.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 06.02.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஒப்பணக்கார வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி எதிரிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண்.1(சதுரடி156.18)<br>அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.10,200/- | ரூ.10,200/-<br>திரு.M.விகாஸ்குமார் ஜெயின்<br>(மின் ஏலம்) | ரூ.10,300/-<br>திரு.M.விகாஸ்குமார் ஜெயின்<br>(ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு 06.02.2014-ல் 2-வது முறையாக நடைபெற்ற ஏலத்தில் கடை எண்.1-க்கு அரசு மதிப்பு ரூ.10,200/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.10,300/-க்கு திரு.M.விகாஸ்குமார் ஜெயின் அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தினை ஒப்படைசெய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.193 நாள்.12.02.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.11798/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 384 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 13

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு வணிக வளாகத்தில் உள்ள கடை எண்.16-ஐ வாடகைக்கு ஒதுக்கீடு செய்ய கோரியது – தொடர்பாக

பார்வை 1.தலைவர் கூடலூர் கவுண்டம்பாளையம் கருப்பட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் கே.1469 கோவை அவர்களின் கடித நாள்.26.12.2013.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.200 நாள்.12.02.2014.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு வணிக வளாகத்தில் 193.75 சதுரடி உள்ள கடை எண்.16-ஐ அலுவலக உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்து தரும்படி தலைவர் கூடலூர் கவுண்டம்பாளையம் கருப்பட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் கே.1469 கோவை அவர்களின் கடித நாள்.25.04.2013-ல் கேட்டுள்ளார்.

பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின்படி, இளம் பொறியாளர் 193.75சதுரடி கட்டிடத்திற்கு வாடகை ரூ.5,530/-யினை நிர்ணயம் செய்து குறிப்பு கொடுத்துள்ளார். மேற்படி கடைக்கு மாதவாடகையாக ரூ.5,530/- செலுத்த பார்வையில் காணும் கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி கடை எண்.16-யை அலுவலக பயன்பாட்டுக்கு மாத வாடகை ரூ.5,530/-க்கு கூடலூர் கவுண்டம்பாளையம் கருப்பட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் கே.1469 கோவை, அவர்களுக்கு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்ய வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.200 நாள்.12.02.2014-ல் மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.8007/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 385 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.51 சீனிவாபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள வணிக வளாக கடை எண்.1-ஐ மூன்றாண்டுகள் முடிந்த பின் புதுப்பிக்க விருப்பமின்மையை தொடர்ந்து செலுத்திய முன் வைப்பு தொகைகளை வாடகைக்கு ஈடுகட்டி மீதம் உள்ள தொகையை வழங்குவது மற்றும் கடையின் உரிமம் ரத்து செய்து மறு ஏலம் கோர அனுமதி கோருவது தொடர்பாக.

பார்வை-

1. மாமன்ற தீர்மான எண்.52 நாள்.10.08.2011.
2. திரு.மணிவண்ணன் அவர்களின் விண்ணப்ப நாள்.18.12.2013.
3. துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள்.18.12.2013.
4. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.200 நாள்.12.02.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.51 சீனிவாபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள வணிக வளாக கடை எண்.1 மாதாந்திர உரிம கட்டணம் ரூ.7,569/- என்ற அடிப்படையில் திரு.v.மணிவண்ணன் என்பவருக்கு மாமன்ற தீர்மான எண்.52 நாள் 10.08.2011-ல் மூன்றாண்டுகளுக்கு 31.03.2014 வரை ஒப்படைப்பு செய்யப்பட்டது.

குத்தகை விதிகளின்படி உரிமைதாரரிடமிருந்து மேற்படி கடைகளுக்கான வைப்புத்தொகை கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வசூல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கடை எண்.1 – செலுத்திய தொகை | |
| வைப்புத்தொகை | -ரூ. 25,000/- |
| காப்புத்தொகை | -ரூ. 25,000/- |
| ஓராண்டுக்கான உரிமக் கட்டணம் முன் வைப்புத்தொகை (ரூ.7569/- x 12) | -ரூ. 90,828/- |
| | -ரூ.1,40,828/- |

| | |
|---|---|
| <u>கடை எண்.1 - செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை டிசம்பர் 2012 முதல் மார்ச் 2013 வரை.</u> | |
| வாடகைத்தொகை | -ரூ.1,13,535/- |
| அபராத தொகை வட்டி | -ரூ. 9,136/- |
| சேவை வரி | -ரூ. 11,232/- |
| | -ரூ.1,33,903/- |

பார்வை 2-ல் திரு.v.மணிவண்ணன் சீனிவாபுரம் லஜபதிராய் சாலையில் உள்ள வணிக வளாக கடை எண்.1-ஐ மூன்றாண்டுகள் முடிந்த பின் புதுப்பிக்க விரும்பமிண்மையை தொடர்ந்து மாநகராட்சி வசம் 31.03.2014-ல் ஒப்படைசெய்யவும் உரிமதாரர் செலுத்திய மேற்கூறிய முன் வைப்பு தொகைகளை வாடகைக்கு ஈடுகட்டி மீதம் உள்ள தொகையை வழங்க கோரியுள்ளார்.

எனவே உரிமதாரர் திரு.v.மணிவண்ணன் என்பவருக்கு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைக்கு 31.03.2014 அன்று மூன்றாண்டுகள் முடிவடைவதால் பார்வை 2-ல் கோரியுள்ளபடி அக்கடையை மாநகராட்சி பொறுப்பு ஏற்கவும் உரிமதாரர் செலுத்திய முன் வைப்புத்தொகைகளை செலுத்த வேண்டிய வாடகை மற்றும் பிற தொகைகளுக்கு ஈடுகட்டி மீதம் உள்ள தொகை ரூ.6925/- திரும்ப வழங்கவும், மேற்படி கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்கவும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.203 நாள்.12.02.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.12175/13/அ1(ம)

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 386 நாள் 17.02.2014</u>

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54 மத்திய பேருந்து நிலையம் மற்றும் வார்டு எண்.82 உக்கடம் பேருந்து நிலையங்களில் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் நிறுவனத்திற்கு பேருந்துகளின் இயக்கங்களை கண்காணிக்க கூண்டு அமைக்க இடம் ஒதுக்கீடு செய்தது – வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

பார்வை : 1.பொது மேலாளர் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் அவர்களின் கடித எண்.26409 நாள்.29.11.2013 மற்றும் கடித எண். 26427 நாள்.10.12.2013.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.204 நாள்.12.02.2014.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54 மற்றும் 82-ல் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் நிறுவனத்திற்கு பேருந்துகளின் இயக்கங்களை கண்காணிக்க கூண்டு அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தரக்கோரி பார்வையில் காணும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | அமைவிடம் |
|---|---|---|
| 1 | 54 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண். 2 |
| 3 | 82 | உக்கடம் பேருந்து நிலையம பொள்ளாச்சி தளம் காவல் துறை விசாரணை அலுவலகம் எதிர் புறம் . |

மேற்படி இடத்திற்கு பொதுப் பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் பெறப்பட்ட பொறியாளரின் அறிக்கைப்படி கீழ்கண்டவாறு மாதாந்திர நிலவாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | அமைவிடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ. | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 54 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண்.2 | 8 ‘x8’=64’ | 55 | 3520/- |
| 2 | 82 | உக்கடம்பேருந்துநிலையம் பொள்ளாச்சி தளம் காவல் துறை விசாரணை அலுவலகம் எதிர் புறம். | 6 ‘x’6=36’ | 15 | 540/- |

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை) லிட் நிறுவனத்திற்கு பேருந்துகளின் இயக்கங்களை கண்காணிக்க கூண்டு அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கு நில வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.204 நாள்.12.02.2014-ல் வரிசை எண்.1-ற்கு வாடகை ரூ.2000/- எனவும் வரிசை எண்.2-ற்கு வாடகை ரூ.400/- எனவும் நிர்ணயம் செய்து மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.11424/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 387 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண். 54 காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வணிக வளாகத்தில் மாற்று திறனாளிகளுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட கடைகளில் கடை எண்.4 மற்றும் 5யை உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படைத்தல் - தொடர்பாக.

பார்வை : 1. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 04.09.2013.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.207 நாள்.12.02.2014.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் மாத வாடகை கடைகளுக்கு 29.08.2013ம் தேதிய மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | 29.08.2013ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|
| 1 | காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிகவளாக கடைகள் மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது (ஆர்.வி. ஹோட்டல் எதிரில்) கடை எண். 4 (32.50 சதுரடி) அரசு நிர்ணய மதிப்பீடு .2011/- | ரூ. 2,050/- ( திரு. K. முருகானந்தம் ஒப்பந்தப்புள்ளி) |
| 2 | காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிகவளாக கடைகள் மாற்று திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது (ஆர்.வி. ஹோட்டல் எதிரில்) கடை எண். 5(29.25 சதுரடி) அரசு நிர்ணய மதிப்பீடு ரூ.1810/- | ரூ. 1,850/- ( திரு. K. முருகானந்தம் ஒப்பந்தப்புள்ளி) |

வரிசை எண். 1 மற்றும் 2ல் உள்ள கடைகள் பல ஆண்டுகளாக காலியாக உள்ளது. இதற்கு 2012 -2013 மற்றும் 2013-2014ம் ஆண்டில் மட்டும் 15 முறைக்கு மேல் ஏலம் நடைபெற்றும் ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. தற்போது 29.08.2013ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் திரு. K.முருகானந்தம் அவர்களிடம் கடை எண்.4க்கு அரசு நிர்ணய மதிப்பீட தொகை ரூ.2011/- யைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி ரூ. 2,050/- பெறப்பட்டுள்ளது. திரு. K. முருகானந்தம் அவர்களிடம் கடை எண்.5 க்கு அரசு நிர்ணய மதிப்பீட தொகை ரூ. 1810/-யைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி ரூ.1,850/- பெறப்பட்டுள்ளது. திரு. K. முருகானந்தம் அவர்கள் மாற்று திறனாளி என்பதால் விதிகளின்படி, அனைத்து தொகைகளையும் பெற்று மாத வாடகையுடன் சேவை வரியும் சேர்த்து இக்கடையை ஒதுக்கீடு செய்ய வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.207 நாள்.12.02.2014-ல் உயர்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 9659 / 2010 / அ1 (ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 388 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72-ல் மாரியப்பன் வீதியிலுள்ள மாநகராட்சி காலி இடத்தை நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடமாக மாற்றி 2014-2017-ம் ஆண்டிற்கான பொது ஏலுத்தில் சேர்ப்பது - தொடர்பாக.

பார்வை 1.துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு உத்திரவு நாள்.20.11.2013.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.202 நாள்.12.02.2014.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72-ல் மாரியப்பன் வீதியிலுள்ள ஏற்கனவே மாநகராட்சி வணிக வளாகமாக செயல்பட்டுவந்து தற்போது மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் இருந்ததை இடித்து தற்போது காலியிடமாக உள்ளது. மேற்படி காலி இடததில் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடமாக மாற்றி 2014-2017-ம் ஆண்டிற்கு இவ்வினத்தை வருடாந்திர ஏலத்தில் சேர்க்க அனுமதி வேண்டப்படுகிறது.

மின்ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத்தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.202 நாள்.12.02.2014-ல் 1. வணிக வளாகம் அமைக்க உறுப்பினர்களால் கோரப்பட்டது.

நில உபயோக மாற்றம் செய்து வணிக வளாகம் கட்டப்படும் வரை பஸ் லாரி முதலிய கனரக வாகனங்கள் நீங்களாக இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமாக பயன்படுத்த மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்ப தீா்மானிக்கப்பட்டது. 2. மாநகராட்சியின் பிற வாகன நிறுத்துமிடங்களில் உள்ள கட்டண விகிதங்களின் படி கட்டணம் நிா்ணயம் செய்ய பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ. 1,50,000/- |
| காப்புத்தொகை | - ரூ. 50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ. 3,00,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | - ரூ. 75,000/- |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.9887/2013/அ1(ம)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 389 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

பொருள் கோயம்புத்தூா் மாநகராட்சி, மத்திய மண்டலம், வாா்டு 72-ல் உள்ள வ.உ.சி மைதானம் வ.உ.சி விளையாட்டு திடல் மற்றும் உயிரியல் பூங்கா ஆகிய இடங்களில் உள்ள தள்ளுவண்டி மற்றும் தரைகடைகளில் உணவு பொருட்கள், விளையாட்டு பொருட்கள் விற்பனை செய்பவா்களுக்கு வாடகை நிா்ணயம் செய்தல் தொடா்பாக.

பாா்வை 1.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.222 நாள்.01.03.2013.
2. ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள்.21.01.2014.
3.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.205 நாள்.12.02.2014.

--------

கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலம் வாா்டு எண்.72-ல் உள்ள வ.உ.சி மைதானம் வ.உ.சி விளையாட்டு திடல் மற்றும் உயிரியல் பூங்கா ஆகிய இடங்களில் தள்ளுவண்டி மற்றும் தரை தரைகடைகளில் உணவு பொருட்கள் மற்றும் விளையாட்டு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மேற்படி கடைகளுக்கு தரை கடைக்கு ரூ5/-ம் தள்ளுவண்டி கடைக்கு ரூ10/-ம் சிக்கன் கடை ஒன்றிற்கு ரூ100/-ம் துறை மூலம் வசூல் செய்யப்படும் தொகை மிகவும் குறைவு என தணிக்கைத்தடை சீட்டு எண்.10/2012-2013-ல் சுட்டிக் காட்டப்பட்டதால் மாத வாடகைத் தொகையினை கீழ்க்கண்டவாறு மறு நிா்ணயம் செய்யலாம் எனவும்,

| | |
|---|---|
| 59 கடைகள் | x ரூ.30( நாள் ஒன்றுக்கு) |
| 1 சிக்கன் கடை | x ரூ.250 (நாள் ஒன்றுக்கு) |

அல்லது மேற்படி தினசரி வசூல் முறையிலிருந்து 2013-2016-க்கான பொது ஏலத்தில் ரூ.7,37,300/- என்ற மதிப்பீட்டில் நிா்ணயம் செய்யலாம் என முடிவு செய்திட வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.222 நாள்.01.03.2013-ல் ஆய்வு செய்து மீண்டும் பொருள் வைக்க தீா்மானிக்கப்பட்டது.

பாா்வை 1 மற்றும் 2-ன்படி ஆய்வு செய்யப்பட்டது. எனவே, கீழ்க்கண்டவாறு வாடகை நிா்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| தரைக்கடை (ஒன்றுக்கு) | - ரூ.300/- மாதம் |
| தள்ளுவண்டி (ஒன்றுக்கு) | - ரூ.600/- மாதம் |
| சிக்கன்கடை (ஒன்றுக்கு) | - ரூ.6,000/- மாதம் |

மேற்குறிப்பிட்டவாறு வாடகை நிா்ணயம் செய்ய அனுமதி வேண்டி மீண்டும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.205 நாள்.12.02.2014-ல் தணிக்கை தடை எழுப்பபட்டுள்ளதால் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் விதமாக கடைகள் இருப்பின் உடனடியாக கடைகள் அப்புறப்படுத்தப்படும். மேலும் மாதாந்திர சுங்க கட்டணம் நிா்ணயம் செய்யப்படுவதால் எதிா்காலத்தில் எவ்வித உரிமையும் கோர இயலாது என்ற நிபந்தனைகளுடன் அலுவலக குறிப்பில் தெரிவித்துள்ள கட்டணம் நிா்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11597/2012/அ1(ம)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 390 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.81 ஒப்பணக்கார வீதி கடை எண்.1,2,3 மற்றும் 9 & வார்டு எண்.83-ல் முத்துவிநாயகர் கோயில் வீதி கடை எண்.12 மாநகராட்சி வணிக வளாகம் கடைகள் 13.11.2013-ல் பூட்டப்பட்டது - உரிமதாரர் செலுத்திய தொகைகளை பறிமுதல் செய்து அக்கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் கோர அனுமதி கோருவது தொடர்பாக.

பார்வை- 1.மாமன்ற தீர்மான எண்.189 நாள் 16.08.2012.
2.மாமன்ற தீர்மான எண்.317 நாள்28.12.2012.
3.வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.10.12.2013.
4.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.208 நாள்.12.02.2014.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி வணிக வளாக கடைகள், வார்டு எண்.81-ல் ஒப்பணக்கார வீதி கடை எண்.1,2,3 மற்றும் 9 & வார்டு எண்.83-ல் முத்துவிநாயகர் கோயில் வீதி கடை எண்.12 ஆகிய கடைகள் 13.11.2013 அன்று பூட்டப்பட்டது மேற்படி கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் கோர வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி 10.12.2013-ல் பெறப்பட்டது.

<u>வாடகை நிலுவை விபரம் :-</u>

<u>ஒப்பணக்கார வீதி மாநகராட்சி கடைகள் - (4 கடைகள்)</u>
கடை எண்.1 – உரிம எண்.8131290 – திரு.எம்.சண்முகம்.
செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவைத்தொகை
ஆகஸ்ட் 2012 முதல் நவம்பர் 2013 வரை - ரூ.1,98,360/-
கடை எண்.2 – உரிம எண்.8131291 – திரு.பி.பாஸ்கரன்.
செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவைத்தொகை
ஆகஸ்ட் 2012 முதல் நவம்பர் 2013 வரை - ரூ.1,24,833/-
கடை எண்.3 – உரிம எண்.8131292 – திருமதி.எம்.திலகம்.
செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவைத்தொகை
ஆகஸ்ட் 2012 முதல் நவம்பர் 2013 வரை - ரூ.1,27,256/-
கடை எண்.9 – உரிம எண்.8131662 – திரு.என்.குருவாயூரப்பன்.
செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவைத்தொகை
டிசம்பர் 2012 முதல் நவம்பர் 2013 வரை - ரூ.43,795/-

<u>முத்துவிநாயகர் கோயில் வீதி மாநகராட்சி கடைகள் - (1 கடை)</u>
கடை எண்.12 – உரிம எண்.8331695 – திரு.ஏ.சாத்தார்.
செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவைத்தொகை
பிப்ரவரி 2013 முதல் நவம்பர் 2013 வரை - ரூ.79,345/-

கடை வாடகை நிலுவையினை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நிலுவைத் தொகை ஏதும் செலுத்தப்படாததால் மாநகராட்சியால் 13.11.2013 அன்று பூட்டப்பட்டது.

எனவே மேற்படி கடை உரிமைதாரர்களின் உரிமத்தை பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி உத்திரவினை ரத்து செய்யவும், அவர்கள் செலுத்திய வைப்புத்தொகையினை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவுவைக்கவும், வாடகை நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நீதிமன்ற மூலம் வழக்குத் தொடரவும், உரிமதாரர்களின் பெயர்களை கருப்பு பட்டியலில் சேர்க்கவும் மேற்படி கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்கவும் வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் வழங்கிய முன்அனுமதிக்கு பின்னேற்பு வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.208 நாள்.12.02.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.11798/13/அ1(ம)

## <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 391 நாள் 17.02.2014</u>

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 20

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.72 மத்திய மண்டலத்திற்குட்பட்ட திரு.வி.க..மாநகராட்சி வணிக வளாகத்தில் கடை எண்.7, 8 மற்றும் 3, 4ம் (நான்கு கடைகள்) வாடகை செலுத்தாத காரணத்தால் 23.11.2013 மற்றும் 04.12.2013 அன்று மாநகராட்சியால் பூட்டப்பட்டது. - உரிமதாரர்கள் செலுத்திய தொகையை பறிமுதல் செய்து மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக

பார்வை-
1. மாமன்ற தீர்மான எண்.82 நாள்.30.09.2009 மற்றும் 241 நாள்.24.09.2012.
2. மாமன்ற தீர்மான எண்.191 நாள்.16.08.2012
3. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.01.02.2014
4. .வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.209 நாள்.12.02.2014.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 மத்திய மண்டலத்திற்குட்பட்ட திரு.வி.க. மாநகராட்சி வணிக வளாகத்தில் கடை எண்.7, 8 மற்றும் 3, 4–ம் (நான்கு கடைகள்) வாடகை செலுத்தாத காரணத்தால் 23.11.2013 மற்றும் 04.12.2013 அன்று பூட்டப்பட்டது. உரிமதாரர் செலுத்திய தொகை விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) கடை எண்.7 திரு.R.வெங்கட்ராமன் பார்வை-2ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.82, 30.09.2009-ன்படி, மாதவாடகை ரூ.2,300/-என்ற அடிப்படையில் ஒரு வருட முன் வாடகை தொகை ரூ.27,600/-, வைப்புத்தொகை ரூ.12,500/- மற்றும் சால்வன்சி தொகை ரூ.6,250/- கீழக் கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | 200910062763 | 06.10.2009 | 23,750/- |
| 2 | 200910271987 | 27.10.2009 | 22,600/- |
| | மொத்தம் | ரூ. | 46,350/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.7 (உரிம எண்.7231396)-
அக்டோபர் 2009 முதல் நவம்பர் 2013 வரை வாடகை நிலுவை
(ரூ.2300 x 30 – (மார்ச் 2012 வரை) &
(ரூ2645 x 20 – (நவம்பர் 2013வரை ) =(69000+ 52900) ரூ.1,21,900/-
அக்டோபர் 2009 முதல் நவம்பர் 2013வரை அபராத வட்டி ரூ. 48,120/-
சேவை வரி ஏப்ரல் 2013 முதல் நவம்பர் 2013 வரை ரூ. 2,616/-
--------------------
ரூ.1,72,636/-
==========

(2) கடை எண்.8 திரு.R.வெங்கட்ராமன் பார்வை-2ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.82, 30.09.2009-ன்படி, மாதவாடகை ரூ.2,300/-என்ற அடிப்படையில் ஒரு வருட முன் வாடகை தொகை ரூ.27,600/-, வைப்புத்தொகை ரூ.12,500/- மற்றும் சால்வன்சி தொகை ரூ.6,250/- கீழ்க்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | 200910062778 | 06.10.2009 | 23,750/- |
| 2 | 200910271993 | 27.10.2009 | 22,600/- |
| | மொத்தம் | ரூ. | 46,350/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.8 (உரிம எண்.7231397)-
செப்டம்பர் 2009 முதல் நவம்பர் 2013 வரை வாடகை நிலுவை
(ரூ.2300 x 31 – (மார்ச் 2012 வரை) &
(ரூ2645 x 20 – (நவம்பர் 2013வரை ) =(71300+ 52900) ரூ.1,24,200/-
செப்டம்பர் 2009 முதல் நவம்பர் 2013வரை அபராத வட்டி ரூ. 49,932/-
சேவை வரி ஏப்ரல் 2013 முதல் நவம்பர் 2013 வரை ரூ. 2,616/-
-------------------
ரூ.1,76,748/-
==========

(3) கடை எண்.3 திரு.சண்முகசுந்தரம் பார்வை-3ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.191, 16.08.2012-ன்படி, மாதவாடகை ரூ.1,200/-என்ற அடிப்படையில் ஒரு வருட முன் வாடகை தொகை ரூ.14,400/-, வைப்புத்தொகை ரூ.12,500/- கீழ் கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | 201209043238 | 04.09.2012 | 25,000/- |
| 2 | 201209061844 | 06.09.2012 | 1,900/- |
| | மொத்தம் | ரூ. | 26,900/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.3 (உரிம எண்.7231392)-
செப்டம்பர் 2012 முதல் டிசம்பர் 2013 வரை வாடகை நிலுவை
(ரூ.1200 X 7 – (மார்ச் 2013 வரை) &
(ரூ.1200 X 9 – (டிசம்பர் 2013வரை ) =(8400+ 10800) ரூ.19,200/-
செப்டம்பர் 2009 முதல் டிசம்பர் 2013வரை அபராத வட்டி ரூ. 2,707/-
சேவை வரி ஏப்ரல் 2013 முதல் டிசம்பர் 2013 வரை ரூ. 1,332/-
---------------------
ரூ.23,239/-
==========

(4) கடை எண்.4 திரு.சண்முகசுந்தரம் பார்வை-3ல் கண்ட மாமன்ற தீர்மான எண்.191, 16.08.2012-ன்படி, மாதவாடகை ரூ.1,200/-என்ற அடிப்படையில் ஒரு வருட முன் வாடகை தொகை ரூ.14,400/-,வைப்புத்தொகை ரூ.12,500/- கீழ் கண்டவாறு செலுத்தியுள்ளார்.

| வ.எண். | இரசீது எண் | நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | 201209043241 | 04.09.2012 | 25,000/- |
| 2 | 201209061845 | 06.09.2012 | 1,900/- |
| | மொத்தம் | ரூ. | 26,900/- |

செலுத்தப்பட வேண்டிய நிலுவை த்தொகை கடை எண்.3 (உரிம எண்.7231392)-
செப்டம்பர் 2012 முதல் டிசம்பர் 2013 வரை வாடகை நிலுவை
(ரூ.1200 X 7 – (மார்ச் 2013 வரை) &
(ரூ.1200 X 9 – (டிசம்பர் 2013வரை ) =(8400+ 10800) ரூ.19,200/-
செப்டம்பர் 2009 முதல் டிசம்பர் 2013வரை அபராத வட்டி ரூ. 2,707/-
சேவை வரி ஏப்ரல் 2013 முதல் டிசம்பர் 2013 வரை ரூ. 1,332/-
------------------
ரூ.23,239/-
==========

உரிம கட்டண நிலுவை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நிலுவைத் தொகை ஏதும் செலுத்தப்படாததால் கடை எண்.7, 8-ம், 23.11.2013-ம் தேதியும் மற்றும் கடை எண்.3, 4–ம், 04.12.2013-ம் தேதியும் மாநகராட்சியால் பூட்டப்பட்டது.

எனவே உரிமதாரர்களான திரு.R.வெங்கட்ராமன் மற்றும் திரு.சண்முகசுந்தரம் என்பவருக்கு பார்வையில் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி ஒதுக்கீடு செய்த உரிம உத்திரவினை ரத்து செய்யவும் உரிமதாரர்களால் செலுத்தப்பட்ட அனைத்துத் தொகைகளையும் ஈடு செய்து நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நிதி நீதிமன்றம் மூலம் வழக்கு தொடரவும், கடை உரிமதாரர்களின் பெயர்களை கருப்பு பட்டியலில் சேர்க்கவும், மேற்படி கடைகளை மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.209 நாள்.12.02.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.719/2014/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 392 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 21

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு.71-ல் பழைய தெற்கு மண்டல அலுவலகத்தின் தரை தளத்தை உதவி இயக்குநர் அலுவலக பயன்பாட்டிற்கும், மேல் தளத்தை மாவட்ட ஊராட்சி மன்ற திட்டக்குழு அலுவலக பயன்பாட்டிற்கும் ஒதுக்கீடு செய்து – வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக

பார்வை :
1. தலைவர் மாவட்ட ஊராட்சி & மாவட்ட திட்டக்குழு கோவை மாவட்டம் அவர்களின் கடித நாள்.23.1.2013.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் கடித எண.193/2013/பே1, நாள்.24.12.2013
3. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.199 நாள்.12.02.2014.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.71-ல் பழைய தெற்கு மண்டல அலுவலகத்தின் தரை தளத்தை உதவி இயக்குநா் அலுவலக பயன்பாட்டிற்கும் மற்றும் மேல் தளத்தை மாவட்ட ஊராட்சி மன்ற திட்டக்குழு அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்து வாடகை நிா்ணயம் செய்து தரக்கோரி பாா்வையில் காணும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இடத்திற்கு பொதுப் பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் பெறப்பட்ட பொறியாளரின் அறிக்கைப்படி கீழ்கண்டவாறு மாதாந்திர வாடகை நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | அமைவிடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிா்ணய செய்யப்பட்ட தொகை ரூ. | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 71 | பழைய தெற்கு மண்டல அலுவலகத்தின் தரை தளம் | 3201 | 52.77 | 1,68,917/- |
| 2 | 71 | பழைய தெற்கு மண்டல அலுவலகத்தின் மேல் தளம் | 3120 | 47.50 | 1,48,200/- |

மேற்குறிப்பிட்டுள்ள அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யவும் அதற்கான மாத வாடகை நிா்ணயம் செய்யவும் அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.199 நாள்.12.02.2014-ல் அரசு அலுவலகம் என்பதால் வாடகையினை 50% குறைத்து நிா்ணயம் செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் . ந.க.எண்.12339/13/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 393 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

பொருள் : குத்தகை இனம் - கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்- வார்டு எண் 57-ற்குட்பட்ட மசக்காளிபாளையம் பகுதியிலுள்ள வணிக வளாகக் கடை எண் 8-ற்கு கடந்த 24.09.2013 ,13.11.2013 மற்றும் 10.01.2014 ஆகிய தேதிகளில் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலம் நடைபெற்றது – இவற்றில் 10.01.2014-ம் தேதி நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரை – மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் - தொடா்பாக.

பாா்வை : 1. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண் 231,
நாள் 12.02.2014.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 57 மசக்காளிபாளையம் பகுதியிலுள்ள வணிக வளாகக் கடை எண் 8-ற்கு கடந்த 24.09.2013, 13.11.2013 மற்றும் 10.01.2014 ஆகிய தேதிகளில் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவற்றிற்கு 10.01.2014-ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் கீழ்க்கண்டுள்ளவாறு சமா்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரா் பெயா் திருவாளா்கள் | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை ரூ. | மின் ஏலத்தொகை மாத வாடகை ரூ. | இம்மாநகராட்சி மதிப்பு மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | ப. காா்த்திகேயன் | … | 11,400/- | 11,200/- |
| 2. | ஆா். பாபு | … | … | … |

மேற்காணும் கடைக்கு மாநகராட்சி மதிப்பாக ரூ.11,200/- நிா்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது நடைபெற்ற மறு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட ஏலதாரா் திரு. ப.காா்த்திகேயன் என்பவா் உச்சக்கேள்வி தொகை ரூ.11,400/-க்கு பதிவு செய்துள்ள உயா்ந்த பட்ச கேள்வித்தொகை மாநகராட்சி மதிப்பைவிட கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி உச்சக் கேள்வியை ஏற்பது தொடா்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மான எண் 231, நாள் : 12.02.2014-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, மேற்காணும் பொருள் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண் 10319 /2013/கி அ11

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 394 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 23

பொருள் : குத்தகை - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - 2014- 2017 –ம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைப்பதற்கு 29.01.2014 -தேதி மறுஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரை – மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல் - தொடர்பாக.

பார்வை : 1.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 230 , நாள் 12.02.2014.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் 29.01.2014-ம் தேதியில் நடைபெற்ற மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் ஏலத்தில் 2014-17 மூன்றாண்டுகளுக்கான மூன்று குத்தகை இனங்களில் கீழ்க்கண்டுள்ள இரண்டு இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்யப்பட்டுள்ளது.

I. ஏல இனம் : சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் | மின்ஏலத்தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | திரு. எ. நமச்சிவாயம் | 20,21,000/- | - |
| 2 | திரு. கே. ரமேஷ் | - | 19,71,000/- |

<u>II ஏல இனம் </u>: வார்டு எண் 69, இராமநாதபுரம் பகுதியிலுள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் | மின்ஏலத்தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1 | திரு. எ. நமச்சிவாயம் | 2,52,000/- | - |
| 2 | திரு. எம். முத்துகிருஷ்ணன் | 3,15,000/- | - |

மேற்காணும் இரண்டு இனங்களில் தலா இருவர் வீதம் நான்கு நபர் கலந்து கொண்டனர்.

<u>அ)</u> சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலுள்ள இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு மாநகராட்சி மதிப்பாக ரூ.19,67,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு.எ.நமச்சிவாயம் என்பவர் ரூ.20,21,000/-க்கு பதிவு செய்துள்ளார். மேற்படித் தொகையானது மாநகராட்சி மதிப்பை விட கூடுதலாக உள்ளது.

ஆ) வார்டு எண் 69, இராமநாதபுரம் பகுதியிலுள்ள மாநகராட்சி கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு மாநகராட்சி மதிப்பாக ரூ.3,11,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு.எம்.முத்துகிருஷ்ணன் என்பவர் ரூ.3,15,000/- க்கு பதிவு செய்துள்ளார். மேற்படித் தொகையானது மாநகராட்சி மதிப்பை விட கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி உச்சக் கேள்வியை ஏற்பது தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 230 நாள் 12.02.2014-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பொருள் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண் 409 /2014/கி அ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 395 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 31 சரவணம்பட்டி விளாங்குறிச்சி சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடை எண் 3க்கு ஆறாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 31 சரவணம்பட்டி விளாங்குறிச்சி சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடை எண் 3க்கு ஆறாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10.01.2014ம் தேதியில் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

கடை எண் 3 (அரசு மதிப்பு ரூ. 9200/-   கடையின் அளவு  456 ச.அடி)

| வ.எண் | ஏலதாரா் பெயா் | 10.01.2014 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை | 06.02.2014 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.டி.செல்லதுரை | ரூ.6120/- | ரூ.9730/- |
| 2 | திருமதி.எஸ்.ராஜேஸ்வரி | ரூ.7110/- | ரூ.9300/- |

மேற்படி கடைக்கு திரு.டி.செல்லதுரை என்பவா் உயா்ந்தபட்சமாக ரூ.9730/-க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளாா்.

மேற்படி ஏலக்கோரிக்கையினை ஏற்று கடையினை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண் 233 நாள் 12.02.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்   ந.க.எண் 6508/2013/அ1

**மாநகர மன்ற தீா்மானம் எண் 396  நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 25

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 28 சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடா்பாக

********

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 28ல் சரவணம்பட்டி பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் காலியாக உள்ள நான்கு கடைகளுக்கு மூன்றாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10.01.2014ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 1க்கு மட்டும் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.18600/- க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது.

கடை எண் 1 (அரசு மதிப்பு ரூ.12000/-   கடையின் அளவு 20 X 11)

| வ.எண் | ஏலதாரா் பெயா் | 13.11.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.எ.செல்வராஜ் | - | - | ரூ.14000/- |
| 2 | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் | - | ரூ.18600/- | ரூ.17500/- |
| 3 | திரு.என்.கந்தசாமி | - | - | - |
| 4 | சஞ்சய் மோட்டாா்ஸ் | - | - | - |

மேற்படி கடைக்கு ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் என்பவா் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.18600/-க்கு உயா்ந்தபட்சமாக ஏலத் தொகை கோரியுள்ளாா்.

மேற்படி ஏலக்கோரிக்கையினை ஏற்று கடையினை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண் 196 நாள் 12.02.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்   ந.க.எண் 17802013/அ1

**மாநகர மன்ற தீா்மானம் எண் 397 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 26

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வாா்டு எண் 01 துடியலூா் மேட்டுபாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு நான்காவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடா்பாக

********

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண் 01ல் துடியலூா் மேட்டுபாளையம் சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு நான்காவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 06.02.2014ம் தேதியில் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

கடை எண் 2 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 06.02.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.பாலதண்டாயுதம் | - | - | ரூ.12600/- |

மேற்படி திரு.ஆர்.பாலதண்டாயுதம் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.12600/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 3 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 06.02.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.கிருஷ்ணன் | - | - | ரூ.12500/- |
| 2 | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் | - | - | ரூ.14500/- |

மேற்படி ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.14500/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 4 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 06.02.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. தருமன் | - | - | ரூ.12101/- |
| 2 | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் | - | - | ரூ.15750/- |

மேற்படி ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.15750/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 6 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 06.02.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. பெருமாள் | - | - | - |
| 2 | திருமதி. முத்தழகு | - | - | ரூ.11200/- |
| 3 | திரு.ஆர்.ரமேஷ் | - | ரூ.15300/- | ரூ.15605/- |

மேற்படி ஏலதாரர்களின் திரு.ஆர்.ரமேஷ் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.15605/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

மேற்படி ஏலக்கோரிக்கையினை ஏற்று கடையினை ஒதுக்கீடு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 195 நாள் 12.02.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 398 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 27

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நான்கவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 01ல் துடியலூர் வெள்ளக்கிணறு சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் காலியாக உள்ள நான்கு கடைகளுக்கு நான்காவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10.01.2014ம் தேதியில் நடைபெற்றது. இதில் கீழ குறிப்பிட்டுள்ள நபர்கள் ஏல வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

கடை எண் 2 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஜெயராஜ் | - | - | ரூ.12600/- |

மேற்படி திரு.எஸ்.ஜெயராஜ் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.12600/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 8 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.பாதுஷா | ரூ.11050/- | - | - |
| 2 | திரு.ஆர்.இளங்கோ | ரூ.9600/- | ரூ.10001/- | - |

இதில் திரு.எம்.பாதுஷா என்பவர் 13.11.2013 ம் தேதிய மின் ஏலத்தில் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.11050/- க்கு உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார். இவர் 10.01.2013 ம் தேதியில் ஏலக் கோரிக்கை ஏதும் அளிக்கவில்லை.

கடை எண் 10 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.ஆர்.உமா | ரூ.9700/- | ரூ.9700/- | ரூ.9700/- |

மேற்படி திருமதி.ஆர்.உமா என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.9700/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 11 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஏ.யூசுப் நாசர் | ரூ.10126/- | - | - |

மேற்படி திரு.ஏ.யூசுப் நாசர் 13.11.2013 ம் தேதிய மின் ஏலத்தில் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.10126/- க்கு உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார். இவர் 10.01.2013 ம் தேதியில் ஏலக் கோரிக்கை ஏதும் அளிக்கவில்லை.

மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்று கடைகளை ஒதுக்கீடு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 194 நாள் 12.02.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6303/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 399 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 28

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 28 சரவணம்பட்டி பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 28ல் சரவணம்பட்டி பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் காலியாக உள்ள நான்கு கடைகளுக்கு மூன்றாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 06.02.2014ம் தேதியில் நடைபெற்றது. இதில் கடை எண் 2க்கு மட்டும் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

கடை எண் 2 (அரசு மதிப்பு ரூ.12000/- கடையின் அளவு 20 X 11)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 10.01.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | 06.02.2014 ம் தேதிய ஏலக் கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் | ரூ.20500/- (மறுஏலம்) | - | ரூ.23500/- |
| 2 | திரு.குணசேகரன் | ரூ.18600/- | - | - |

மேற்படி கடைக்கு ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்தார் உயர்ந்தபட்சமாக ரூ.23500/-க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார்.

மேற்படி ஏலக்கோரிக்கையினை ஏற்று கடையினை ஒதுக்கீடு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 234 நாள் 12.02.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 6508/2013/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 400 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 29

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 செங்காடு பகுதியில் முதல் தளத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு நடைபெற்ற ஐந்தாவது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55ல் செங்காடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதிதாக முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள 4 மற்றும் 5 ஆகிய இரண்டு கடைகளுக்கு ஐந்தாவது முறையாக மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10.01.2014ம் தேதியில் நடைபெற்றது.

மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

கடை எண் 4 (அரசு மதிப்பு ரூ.3000/- கடையின் அளவு 11 X 10)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|
| 1 | திரு.பி.சதீஸ்குமார் | ரூ.3700/- |

மேற்படி கடைக்கு தொடர்ந்து நான்கு முறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை எனவே 10.01.2014 ம் தேதிய ஏலத்தில் திரு.பி.சதீஸ்குமார் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.3700/- க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார்.

கடை எண் 5 (அரசு மதிப்பு ரூ.3000/- கடையின் அளவு 11 X 10)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய ஏலக் கோரிக்கை |
|---|---|---|
| 1 | திரு.பி.சதீஸ்குமார் | ரூ.3700/- |

மேற்படி கடைக்கு தொடர்ந்து நான்கு முறை ஏலம் விடப்பட்டும் ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை எனவே 10.01.2014 ம் தேதிய ஏலத்தில் திரு.பி.சதீஸ்குமார் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.3700/- க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார்.

மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்று கடைகளை ஒதுக்கீடு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 197 நாள் 12.02.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 401 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 30

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 01 துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 01ல் துடியலூர் மேட்டுபாளையம் சாலையில் மாநகராட்சி மூலம் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடைகளுக்கு மூன்றாவது முறையாக மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10.01.2014ம் தேதியில் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

கடை எண் 5 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு.பி.ஆர்.சதாசிவம் | - | - | ரூ.13710/- |

மேற்படி திரு.பி.ஆர்.சதாசிவம் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.13710/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 8 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. எஸ்.தருமன் | ரூ.7001/- | - | ரூ.13101/- |
| 2 | திருமதி.மேகலா | - | - | ரூ.6400/- |
| 3 | திரு.டி.சிவராஜ் | - | - | ரூ.15500/- |

மேற்படி திரு.டி.சிவராஜ் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.15500/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 9 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. கே.நடராஜன் | ரூ.10500/- | - | ரூ.11400/- |
| 2 | திரு.டி.கணேசன் | - | - | ரூ.15500/- |

மேற்படி திரு.டி.கணேசன் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.15500/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

கடை எண் 10 (அரசு மதிப்பு ரூ.6000/- கடையின் அளவு 10 X 16)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | 13.11.2013 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | 10.01.2014 ம் தேதிய மின் ஏலக்கோரிக்கை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு. டி. ஜெகதீசன் | - | - | ரூ.15500/- |
| 2 | திரு.கே.நடராஜன் | ரூ.10500/- | 13200/- | - |
| 3 | திரு.ஆர்.ரமேஷ் | - | - | ரூ.12700/- |

மேற்படி ஏலதாரர்களின் திரு.டி.ஜெகதீசன் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.15500/- உயர்ந்தபட்சமாக ஏலத்தொகை கோரியுள்ளார்.

மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்று கடைகளை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 195 நாள் 12.02.2014 ல் மாமன்றத்திற்கு பரிந்துறை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பொருள் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 402 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 31

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 நேரு ஸ்டேடியம் எதிர்புறமுள்ள மாநகராட்சி காலி இடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை வாரவிழாவிற்கு ஒதுக்கீடு செய்து வாடகை செலுத்த கோரியது – தொடர்பாக.

பார்வை
1. உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அவர்களின் 23.12.2013-ம் தேதிய கடிதம்.
2. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள்.31.12.2013.
3. உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அவர்களின் 13.01.2014-ம் தேதிய கடிதம்.
4. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.198 நாள்.12.02.2014.

------

பார்வை 1-ல் காணும் விண்ணப்பத்தில் வார்டு எண்.72 நேரு ஸ்டேடியம் எதிர்புறமுள்ள மாநகராட்சி காலி இடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை கைத்தறி வாரவிழா நடத்த 31.12.2013 முதல் 14.01.2014 வரை 15 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் பார்வை 2-ன் படி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய கட்டணங்களை கீழே குறிப்பிட்டுள்ளபடி செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மைதான கட்டணம் | (1033) (12783x15) | ரூ.1,91,745/- |
| 2. | சேவைக்கட்டணம் | (4050(1) 12.36% | ரூ. 23,700/- |
| 3. | வைப்புத் தொகை | (4018) | ரூ. 10,000/- |
| | மொத்தம் | | ரூ.2,25,445/- |

பார்வை 3-ல் காணும் கடிதத்தில் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வுயர மத்திய அரசின் நிதி உதவியுடன் கைத்தறி கண்காட்சி நடத்தப்படுகிறது அதில் பங்கு பெறும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஸ்டால்கள் இலவசமாக ஒதுக்கீடு செய்யப்பட்டதால் மேற்குறிப்பிட்ட வாடகை தொகையினை குறைத்து சதுரடிக்கு ரூ.5/- வீதம் நிர்ணயம் செய்து வழங்குமாறும் அதற்கான காசோலை ரூ.75000/- வழங்கியுள்ளார்கள்.

மேற்படி துறை செலுத்த வேண்டிய வாடகை மற்றும் பிற வரிகள் செலுத்துவது குறித்து முடிவு செய்ய வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.198 நாள்.12.02.2014-ல் மாமன்றத்தின் முடிவிற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.12416/13/அ1(ம)

### மாநகர மன்ற தீர்மானம் எண் 403 நாள் 17.02.2014

கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கு ஒதுக்கிடுவது என்பதால் சேவை வரிகள் உட்பட மைதானத்திற்கான வாடகை ரூ. 75,000/- என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் குத்தகை இனங்கள் 01.04.2014 முதல் 31.03.2017-ம் ஆண்டுக்கான – பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக் கோரிக்கையை ஏற்று - ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை
1.ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 10.02.2014.
2.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.210 நாள்.12.02.2014.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் சார்ந்த கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2014 முதல் 31.03.2017 வரையிலான ஆண்டிற்கு 08.01.2014 மற்றும் 29.01.2014 தேதியில் நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 08.01.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. | 29.01.2014-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சிவானந்தாகாலனி நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்அரசு நிர்ணய மதிப்பீடு ரூ42,500/- | திரு.கே.பாலாஜி | ---- | 46,800/- (ஒப்பந்தப்புள்ளி) |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | சத்தி ரோடு ஆம்னி பேருந்து நிலையம் உட்புறமுள்ள நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசு நிா்ணய மதிப்பீடு ரூ5,37,000/- | திரு.S.கிருஷ்ணன் திரு.எஸ்.சங்கா் | 5,37,000/- (ஒப்பந்தப்புள்ளி) | 5,76,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 3 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் புதிய நவீன கட்டணம் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும்உரிமம். அரசுநிா்ணயமதிப்பீடு ரூ12,51,000/- | திரு.A.அன்வா் பாஷா திரு.எஸ்.வேலுசாமி | 12,51,000/- (ஒப்பந்தப்புள்ளி) | 12,55,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 4 | சீனிவாசபுரம் கல்யாண மண்டபம் பராமரிக்கும் உரிமம் அரசு நிா்ணய மதிப்பீடு ரூ7,10,000/- | திரு.T.ராகவலிங்கம் | 7,10,000/- (ஒப்பந்தப்புள்ளி) | 7,15,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 5 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்துசெல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். அரசுநிா்ணய மதிப்பீடு ரூ17,22,400/- | திரு.P.செந்தில்குமாா் திரு.சி.செல்வம் | 17,22,400/- (ஒப்பந்தப்புள்ளி) | 17,30,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 6 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலைத்தில் தரைத்தள கேரேஜ் பகுதி மற்றும் 5வது தளபகுதியில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டண வசூலிக்கும் உரிமம் அரசுநிா்ணய மதிப்பீடு ரூ24,00,000/- | திரு.A.நமச்சிவாயம் திரு.எம்.அருண்சங்கா் | 24,00,000/- (ஒப்பந்தப்புள்ளி) | 26,02,600/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 7 | வ.உ.சி பூங்கா சிறுவா் இரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் அரசுநிா்ணய மதிப்பீடு ரூ2,76,300/- | திரு.S.கிருஷ்ணன் | 2,76,300/- (ஒப்பந்தப்புள்ளி) | 2,88,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 8 | தியாகி குமரன் மாா்க்கெட் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலிக்கும் உரிமம். அரசுநிா்ணய மதிப்பீடு ரூ20,66,000/- | திரு.R.சுப்ரமணி திரு.எஸ்.சங்கா் | 20,66,000/- (மின் ஏலம்) | 22,23,000/- (ஒப்பந்தப்புள்ளி) |
| 9 | குரு ஹோட்டல் அருகில் நான்கு சக்கர வாகனம் கட்டண வசூலிக்கும் உரிமம். அரசு நிா்ணய மதிப்பீடு ரூ11,66,000/- | திரு.K.நடராஜ். திரு.எம்.அரவிந்த் | 11,66,000/- (மின் ஏலம்) | 14,10,000/- (மின் ஏலம்) |

மேற்படி குத்தகை இனத்தில் வரிசை எண்.1 முதல் வரிசை எண்.9 வரை உள்ள அனைத்து இனங்களுக்கும் மேற்குறிப்பிட்டுள்ள குத்தகைதாரா்களிடமிருந்து அரசு நிா்ணயம் செய்த மதீப்பீட்டை காட்டிலும் கூடுதலாக ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே இவ்வினங்களின் உயா்ந்த பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று ஒப்படை செய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.210 நாள்.12.02.2014-ல் 1.வரிசை எண்.4ஐ தவிர பிற இனங்களுக்கு உயா்ந்தபட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமனறத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது. 2. வரிசை எண்.4 மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்ப தீா்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மாமன்றத்தின் ஒப்புதலுக்கும் / முடிவிற்கும் ந.க.எண். 11939/13/அ1(ம)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 404 நாள் 17.02.2014**

பொருளை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 33**

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூா் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வாா்டு எண்.82-ல் பிரதான அலுவலக வளாகத்திலுள்ள அம்மா மூலிகை உணவகத்திற்கு – வாடகை நிா்ணயம் செய்தல் - தொடா்பாக |
| பாா்வை : | 1.மாமன்ற தீா்மான எண்.290 நாள் 14.11.2013.<br>2.உதவி மாநகர நல அலுவலா் (பொ) அவா்களின் கடித எண்.4089/2013/எம்.இ.6, நாள்.20.01.2014<br>3.ஆணையாளா் அவா்களின் உத்திரவு நாள். 01.02.2014<br>4.வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.206 நாள்.12.02.2014. |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82 பிரதான அலுவலக வளாகத்தில் அம்மா மூலிகை உணவகத்திற்கு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி கட்டிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான வாடகை நிர்ணயம் செய்து தரக்கோரி பார்வை 2-ல் காணும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இடத்திற்கு பொதுப் பணித்துறை வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் பெறப்பட்ட பொறியாளரின் அறிக்கைப்படி கீழ்கண்டவாறு மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | அமைவிடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ. | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 82 | மாநகராட்சி பிரதான அலுவலக வளாகம் | 1996 | 55/- | 1,09,780/- |

“ அம்மா மூலிகை உணவகம்” மலிவு விலையில் உயர்தரமான சத்தான ஆகாரங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொதுப் பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை மிகவும் உயர்வாக உள்ளது. எனவே வாடகையினை குறைத்து நிர்ணயம் செய்ய வழிக்காட்டுதல் வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.206 நாள்.12.02.2014-ல் மலிவு விலையில் ஆரோக்கியமான உணவு வழங்கி வருவதால் பெருமளவில் மாநகராட்சி ஊழியர்களும் பொது மக்களும் பயன் பெற்று வருகின்றனர். எனவே மாத வாடகை ரூ.20,000/- என நிர்ணயம் செய்து மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மாமன்றத்தின் முடிவிற்கு . ந.க.எண். 635/14/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 405 நாள் 17.02.2014</u>**

மாத வாடகை ரூ 10,000/- என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 34

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.54, 2012-2015-ம் ஆண்டிற்கான இனம் காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண்.4ஐத் தவிர்) கட்டணம் வசூலிக்கும் உரிமம். - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் திரு.இரா. செந்தில்வேல் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – ஏலத்தொகை செலுத்தாததால் - ஏலத்தொகைகளை பறிமுதல் செய்து – மறு ஏலம் கொண்டுவருவது - தொடர்பாக

பார்வை 1)திரு.இரா.செந்தில்வேல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி நாள்.10.05.2012.
2) மாமன்ற தீர்மான எண்.42. நாள்.30.05.2012.
3).இவ்வலுவலக இறுதி அறிவிப்பு நாள்.06.05.2013.
4).வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.228 நாள்.12.02.2014.

************

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனமான காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண்.4ஐத் தவிர்) கட்டணம் வசூலிக்கும் உரிமயாணை (2012 – 2015) மூன்று ஆண்டு அடிப்படையில் முதலாம் ஆண்டுக்கு (01.06.2012முதல்31.03.2013 முடிய) கட்டணம் வசூலிக்கும் உரிமம் திரு.இரா.செந்தில்வேல் அவர்களுக்கு மாமன்ற தீர்மான எண்.42, நாள் 30.05.2012-ன் படி ஒரு வருட ஏலத் தொகை ரூ.26,76,000/-க்கு . ஒதுக்கீடு செய்யப்பட்டது. 01.06.2012 முதல் 31.03.2012 வரை உள்ள காலத்திற்கு ஏலத் தொகை ரூ.22,30,000/-, வைப்புத்தொகை மற்றும் பிற தொகைகள் செலுத்தி உரிமத்தினை ஏற்றுக்கொள்ள முதல் மற்றும் இறுதி அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

திரு.இரா.செந்தில்வேல் உரிமதாரர் இதுநாள் வரை ஏலத்தொகை செலுத்தாத காரணத்தால் மேற்படி ஏலதாரர் செலுத்திய தொகை ரூ.5,50,000/-யினை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைக்கவும் இவ்வினத்திற்கு மறு ஏலம் கொண்டு வரவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.228 நாள்.12.02.2014-ல் மாமன்றத்தின் முடிவிற்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண்11130/2012/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 406 நாள் 17.02.2014</u>**

ஒத்திவைக்கப்பட்டது.

---

## பொருள் எண் 35

**பொருள் -** கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வார்டு எண்.23-ல் D.B ரோடு வணிக வளாக கடை எண்.12-ஐ வரிவிதிப்பு எண்.2320050 ந.க.எண்.23314/92/எ62 நாள்.10.03.1992-ன்படி திரு.எம்.ஆர்.பாலு என்பவர் பெயரிலிருந்து திருமதி.நீலம்நந்தா பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு கடை ஓதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் கடையை 15 வருடங்களாக உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதை கண்டறிந்து திருமதி.நீலம்நந்தா பெயரிலிருந்த கடை எண்.12-ஐ ரத்து செய்து மறு ஏலம் கொண்டு வர மாமன்றத்திற்கு பொருள் வைப்பது – தொடர்பாக.

பார்வை – 1. இவ்வலுவலக விளக்கம் கோரும் இறுதி அறிவிப்பு ந.க.எண்.5024/2013/அ1(மே) நாள்.18.12.2013
2. திரு.R.K.நந்தா அவர்களின் விண்ணப்ப நாள்.24.12.2013
3. வரிவதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.189 நாள்.12.02.2014

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.23-ல் D.B ரோடு வணிக வளாக கடை எண்.12-ஐ வரிவிதிப்பு எண்.2320050 ந.க.எண்.23314/92/எ62 நாள்.10.03.1992-ன்படி திரு.எம்.ஆர்.பாலு என்பவர் பெயரிலிருந்து திருமதி.நீலம்நந்தா பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பார்வை 1-ல் கண்டுள்ள இறுதி அறிவிப்பில் மேற்படி கடையை 15 வருடங்களாக உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதை கண்டறிந்து திருமதி.நீலம்நந்தா அவர்களுக்கு விளக்கம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

பார்வை 2-ல் கண்டுள்ள திருமதி.நீலம்நந்தா அவர்களின் கடிதத்தில் கடை எண்.12ஐ திரு.A.K.சிக்கந்தர் பாஷா என்பவருக்கு உள் வாடகைக்கு விடவில்லை எனவும் தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடையை ரத்து செய்ய வேண்டாம் எனவும் விண்ணப்பம் கொடுத்துள்ளார். இதுவரை கடை உரிமைதாரர் திருமதி.நீலம்நந்தா நேரில் ஆஜராகவில்லை. மேலும் வரிவிதிப்பு எண்.2320050-க்கு 2013-2014 ஆகஸ்டு முதல் 2013-2014 ஜனவரி வரை தொகை ரூ.42,942/- நிலுவையில் உள்ளது.

மேலும் திரு.A.K.சிக்கந்தர் பாஷா என்பவர் கடை எண்.12-ஐ 15 வருடங்களாக Leeds Footwear என்ற பெயரில் கடையை நடத்துவதாகவும் தெரிவித்து (Certificate of Registration) வணிகவரி துறையின் பதிவு சான்றிதழ் மற்றும் சிட்டி பேங்க் கணக்கு எண்.போன்றவைகள் ஆதாரங்களுடன் சமர்ப்பித்துள்ளார். எனவே திருமதி.நீலம்நந்தா உள்வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

மேற்படி கடை எண்.12-ஐ திருமதி.நீலம்நந்தா பெயரிலிருந்து ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வர வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.189 நாள்.12.02.2014-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.5024 / 2013 / அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 407 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 36

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2014-17-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.01.2014-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது - தொடர்பாக.

பார்வை: 1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.29.01.2013
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.232 நாள்.12.02.2014.

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2014-2017 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 29.01.2014-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 29.01.2014

| வ. எண் | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத் தொகை யில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை (ரூ) | ஏலதாரா் பெயா் | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந் த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | உயா்ந்த பட்ச ஏலத் தொகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர்.மொத்த காய் கறி மார்க்கெட் நவீன கட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 330000 | எஸ்.வேலுச்சாமி | 3,78,000 | - - | 3,78,000 |

குத்தகை இனங்கள்

வரிசை எண்.1-ல் உள்ள இனத்திற்கு 2014-17-ம் ஆண்டு 2-வது ஏலம் 29.01.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் எஸ்.வேலுச்சாமி ஒருவா் மட்டும் கலந்துகொண்டு அரசு நிா்ணயத்தொகை ரூ.3,30,000/- (Base value) விட அதிகமாக ரூ.3,78,000/- ற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்காணும் இனத்தை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.232 நாள்.12.02.2014-ன்படி உயா்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.12374/2013/அ1(மே)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 408 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 37

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - 2014-2016-க்கு வணிக வளாக கடைகளுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி 10.01.2014-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது – தொடா்பாக.

பாா்வை: 1.பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.10.01.2014.
2. ஆணையாளா் அவா்களின் உத்தரவு நாள்.17.01.2014
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.183 நாள்.12.2.2014

********

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2014-2016-க்கு வணிக வளாக கடைகள் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மிண் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 10.01.2014-ந் தேதியன்று நடைபெற்றது. இதில் உயா்ந்தப்பட்ச ஏலம் கோரியவா்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு.

ஏலம் நடைபெற்ற தேதி – 10.01.2014
வணிக வளாக கடைகள்

| வ. எண் | வணிகவளாகங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிா்ணயம் செய்யப் பட்ட தொகை | ஏலதாரா் பெயா் | உயா்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயா்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | பன்னீா் செல்வம் பூமாா்க்கெட் மேடை கடைகள் மாதவாடகை | | | | | |
| | F72 | 2281 | திரு. பாலகிருஷ்ணன் | 4200 | - | 4200 |

வரிசை எண்.1-ல் உள்ள கடை எண்..F72-க்கு திரு.பாலகிருஷ்ணன் என்பவா் ஒருவா் மட்டும் கலந்துகொண்டு அரசு மதிப்பு ரூ.2281/- விட ரூ.4200/-க்கு உயா்ந்தபட்ச மின் ஏல கேள்வி தொகை கோரியுள்ளாா். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்காணும் கடையை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.183 நாள்.12.02.2014-ன்படி உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.12374 / 2014 / A1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 409 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 38

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - 2014-2016-க்கு வணிக வளாக கடைகளுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி 10.01.2014-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – மாமன்றத்திற்கு பொருள் வைப்பது – தொடர்பாக.

பார்வை: 1.பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.10.01.2014.
2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.17.01.2014
3. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.184 நாள்.12.02.2014

********

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2014-2016-க்கு வணிக வளாக கடைகள் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மிண் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 10.01.2014-ந் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தப்பட்ச ஏலம் கோரியவர்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு.

ஏலம் நடைபெற்ற தேதி – 10.01.2014

வணிக வளாக கடைகள்

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | 2-வது ஏலம் | 3-வது ஏலம் | 4-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | வார்டு எண்.23-ல் திருவேங்கடசாமி சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் (10 x 21 =210 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | | |
| | கடை எண்.2 | 28500 | M.ரமேஷ்<br>ஜோதி<br>K.கித்வாணி | -<br>- | 24000<br>- | 28500<br>- | -<br>- | 29550<br>17000 | 29550 |
| | கடை எண்.7 | 15777 | R.ஸ்ரீதர் | 13300 | 15100 | 15777 | ஒருவரும் கலந்து கொள்ளவில்லை | | 15777 |
| | கடை எண்.8 | 21110 | S. இம்மானுவேல்<br>A.சீனிவாசன் | -<br>15000 | 20000<br>14300 | 21110<br>17700 | -<br>- | 26500<br>- | 26500 |
| | கடை எண்.9 | 25200 | T.பிரபாகரன்<br>P.அனிதா<br>D.மணிகண்டன் | -<br>-<br>- | -<br>-<br>16000 | 25200<br>23000<br>17100 | -<br>-<br>- | 31100 | 31100 |

கடை எண்.2-க்கு அரசு மதிப்பை விட உயர்ந்த பட்சம் ரூ.29550/-ற்கு திரு.M.ரமேஷ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.7-ற்கு 2-வது ஏலம் 24.9.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 2 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.15100/-ற்கு திரு.R.ஸ்ரீதர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 3-வது நடைபெற்ற 13.11.2013-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் திரு.R.ஸ்ரீதர் என்பவர் ஒருவர் மட்டும் கலந்துகொண்டு ரூ.15777/-ற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். தற்பொழுது நடைபெற்ற 10.01.2014-ம் 4-வது ஏலத்தில் திரு.R.ஸ்ரீதர் என்பவர் ஒருவர் மட்டும் மின் ஏலத்தில் பதிவு செய்துள்ளார் . எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.8-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்சம் ரூ.26500/-ற்கு திரு. S.இம்மானுவேல் என்பவர் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.9-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்சம் ரூ.31100/-ற்கு திரு.T.பிரபாகரன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்

எனவே மேற்காணும் கடைகளை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.184 நாள்.12.02.2014-ன்படி உயா்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.12374 / 2014 / A1(w)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 410 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 39

பொருள் -கோயம்புத்தூா் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வாா்டு எண்.23 வரிவிதிப்பு எண்.2320044-ற்கு D.B. ரோடு வணிக வளாக கடை எண்.6 திருமதி.நீலம்நந்தா என்பவா் பெயரிலிருந்து திரு.T.பாலாஜி பெயருக்கு பெயா்மாற்றம் செய்வது சம்பந்தமாக – மாமன்றத்திற்கு பொருள் வைப்பது - தொடா்பாக.

பாா்வை - 1. திரு.T.பாலாஜி அவா்களின் விண்ணப்ப நாள் 05.11.2013
2. ஆணையாளா் அவா்களின் உத்தரவு நாள். 28.01.2014
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண்.188 நாள்.12.02.2014

-----------------

கோயம்புத்தூா் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வாா்டு எண்.23 D.B. ரோடு வணிக வளாக கடை எண்.6 வரிவிதிப்பு எண்.2320044 M.R.பாலு அவா்களுக்கு ஓதுக்கீடு செய்யப்பட்டு திருமதி.நீலம்நந்தா என்பவருக்கு 01.02.1992-ம் தேதி முதல் ரூ1,620/- என்ற வாடகை அடிப்படையில் உரிமம் பெயா் மாற்றம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது பொதுப்பணிதுறை மதிப்பீட்டின்படி 01.04.2012 முதல் ரூ.6,370/- என்ற அடிப்படையில் உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஓதுக்கீடு செய்யப்பட்ட கடை எண்.6-ஐ திரு.T.பாலாஜி என்பவா் பெயருக்கு பெயா்மாற்றம் செய்ய 12.11.2013-ம் தேதி ஆட்சேப்பனையின்மை சான்றிதழ் கொடுத்துள்ளாா். எனவே கடையானது 456 சதுரடிக்கு பொதுப்பணித்துறை மதிப்பு ரூ.25,080/- ஆகும்.

பாா்வை 2-ல் காணும் ஆணையாளா் அவா்களின் உத்தரவின்படி வணிக வளாக கடைக்கு பெயா்மாற்றம் செய்ய அரசாணை(நிலை) எண்.92/30.07.2007 நகராட்சி நிா்வாகம்(ம) குடிநீா் வழங்கல் துறை நாள்.30.07.2007-ல் ஒரு வருட வாடகை தொகை ரூ.3,00,960/- வைப்புத்தொகை ரூ.3,00,960/- மற்றும் விண்ணப்ப கட்டணம் ரூ.5,000/- செலுத்தியுள்ளாா்.

எனவே மேற்படி வணிக வளாக கடை எண்.6-ற்கு ரூ.25,080/- என வாடகை நிா்ணயம் செய்து திருமதி.நீலம்நந்தா பெயரிலிருந்து திரு.T.பாலாஜி பெயருக்கு பெயா்மாற்றம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீா்மான எண்.188 நாள்.12.02.2014-ன்படி அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டது. எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.10995/ 2013 / அ1(மே)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 411 நாள் 17.02.2014**

ஒத்திவைக்கப்பட்டது

---

## பொருள் எண் 40

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - 2014-2016-க்கு வணிக வளாக கடைகளுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி 10.01.2014-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது மாமனற்த்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது – தொடா்பாக.

பாா்வை: 1.பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.10.01.2014.
2. ஆணையாளா் அவா்களின் உத்தரவு நாள்.17.01.2014
3. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.186 நாள்.12.02.2014

********

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2014-2016-க்கு வணிக வளாக கடைகள் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மிண் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 10.01.2014-ந் தேதியன்று நடைபெற்றது. இதில் உயா்ந்தப்பட்ச ஏலம் கோரியவா்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு.

ஏலம் நடைபெற்ற தேதி – 10.01.2014
வணிக வளாக கடைகள்

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | 2-வது ஏலம் | 3-வது ஏலம் | 4-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உயர்ந்த பட்சமின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1. | வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் தெற்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (கடை எண். 1-7, 11-20, 22-36) (10 x 16 =160 சதுரடி அளவுள்ள கடைகள் தனித்தனியாக) | | | | | | | | |
| | கடை எண்.1 | 9000 | Kஅருணகிரிராஜ் | - | - | - | 9800 | 8500 | 9800 |
| | கடை எண்.15 | 9500 | A.R.கார்திகேயன் | 9500 | 4200 | - | - | - | 9500 |
| | கடை எண்.17 | 9600 | N.மயில்சிங்காரம்<br>M.அமுதா | 9600<br>7500 | 8000<br>7600 | 10000<br>9300 | 10200<br>- | -<br>- | 10200 |
| | கடை எண்.29 | 9000 | R.மகாலட்சுமி ராமசாமி | - | 10100 | 10100 | - | ஒருவரும் கலந்து கொள்ள வில்லை | 10100 |
| | கடை எண்.30 | 9000 | N.ஆறுமுகம் | | 10100 | 10100 | - | ஒருவரும் கலந்து கொள்ள வில்லை | 10100 |
| | கடை எண்.35 | 9500 | B.சுரேஷ்குமார் | - | 9500 | 9500 | - | ஒருவரும் கலந்து கொள்ள வில்லை | 9500 |
| | கடை எண்.36 | 9000 | ஜோதி<br>K. கித்வாணி | - | - | - | - | 14000 | 14000 |

கடை எண்.1-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.9800/-ற்கு திரு.K.அருணகிரி என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.15-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.9500/-ற்கு திரு.A.R.கார்த்திகேயன் என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். தற்பொழுது நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. மேலும் இது 4-வது ஏலம் ஆனதால் திரு.A.R.கார்த்திகேயன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.17-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச ஏலத்தொகை திரு.N.மயில்சிங்காரம் என்பவர் உயர்ந்தப்பட்ச ஏலத்தொகை ரூ.10100/- மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.29-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10100/-ற்கு திரு.R.மகாலட்சுமி ராமசாமி என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.30-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10100/-ற்கு திரு.N.ஆறுமுகம் என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.35-ற்கு 2-வது ஏலத்தில் உயர்ந்தபட்சம் ரூ.9500/-ற்கு திரு.B.சுரேஷ்குமார் என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு மின்ஏலம் கோரியிருந்தார். தற்பொழுது நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. மேலும் இது 4-வது ஏலம் ஆனதால் திரு. திரு.B.சுரேஷ்குமார் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.36-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.14000/-ற்கு திருமதி.ஜோதி கே கித்வாணி என்பவர் ஒருவர் மட்டுமே கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்காணும் கடைகளை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.186 நாள்.12.02.2014-ன்படி உயர்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.12374 / 2014 / A1(w)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 412 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 41

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - 2014-2016-க்கு வணிக வளாக கடைகளுக்கு மறு பொது மின் ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி 10.01.2014-ல் நடைபெற்றது ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைப்பது – தொடர்பாக.

பார்வை: 1.பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.10.01.2014.
2. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.17.01.2014
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.187 நாள்12.02.2014

********

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2014-2016-க்கு வணிக வளாக கடைகள் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மிண் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 10.01.2014-ந் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் கோரியவர்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு.

ஏலம் நடைபெற்ற தேதி – 10.01.2014

வணிக வளாக கடைகள்

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | 2-வது ஏலம் | 3-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 1 | வார்டு எண்.5 கவுண்டம்பாளையம் பிரிவு ஒணாப்பாளையம் சாலை அசோக் நகர் கிழக்கு பகுதி கடை எண்.6 முதல் 10 வரை (தலா 16'x10') | | | | | | | |
| | கடை எண். 6 | 7100 | எம்.மாரிமுத்து<br>ஏ.சக்திவேல் | -<br>- | -<br>- | -<br>- | 10350<br>- | 10350 |
| | கடை எண். 7 | 7000 | S.சங்கர் | - | - | - | 9450 | 9450 |
| | கடை எண். 8 | 7500 | M.முருகானந்தம் | - | 7500 | - | - | 7500 |

வரிசை எண்.1-ல் உள்ள வார்டு எண்.5 கவுண்டம்பாளையம் பிரிவு ஓணாப்பாளையம் சாலை அசோக்நகர் கிழக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட

கடை எண்.6-ற்கு அரசு மதிப்பைவிட உயர்ந்தபட்சம் ரூ.10350/-ற்கு திரு.M.மாரிமுத்து என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.7-ற்கு 1 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.7500/-ற்கு திரு.S.சங்கர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

கடை எண்.8-ற்கு 1 நபர்கள் கலந்து கொண்டு உயர்ந்தபட்சம் ரூ.7500/-ற்கு திரு.M.முருகானந்தம் என்பவர் மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்காணும் கடைகளை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.187 நாள்.12.02.2014-ன்படி உயர்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.12374 / 2014 / A1(w)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 413 நாள் 17.02.2014**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 42

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 6.02.2014-ல் நடைபெற்றது – ஏலக்கேள்வி /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது –மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: 1. பொதுமறுமின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள்.6.02.2014.
2. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.229 நாள்.12.02.2014

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வணிக வளாக கடைகளுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 6.02.2014-ம் தேதியன்று நடைபெற்றது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு

ஏலம் நடைபெற்ற தேதி – 6.02.2014

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | 1-வது ஏலம் | 2-வது ஏலம் | 3-வது ஏலம் | 4-வது ஏலம 06.02.2014 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 4. | வார்டு எண்.23-ல் திருவேங்கடசாமி சாலையில் புதிதாக கட்டப்பட்ட கடைகள் 10 x 21 =210 சதுரடி அளவுள்ள கடைகள் | | | | | | | | |
| | கடை எண்.6 | 18000 | R.ஸ்ரீதர்<br>V.மோகன்ராஜ் | 13500<br>- | 14700<br>- | 15678<br>18000 | -<br>- | 18700<br>- | 18700 |
| 5. | வார்டு எண். 24ல் மேற்கு ஆரோக்கியசாமி சாலையில் வடக்கு பகுதியில் புதிதாக கட்டப்பட்ட (10 x 16 =160 சதுரடி அளவுள்ள கடைகள் | | | | | | | | |
| | கடை எண்.15 | 9500 | A.R.கார்திகேயன் | 9500 | 4200 | - | - | - | 9500 |
| | கடை எண்.18 | 9000 | M.அமுதா | - | - | - | 10000 | - | 10000 |
| | கடை எண்.32 | 9000 | S.ராமநாதன் | - | - | - | - | 11000 | 11000 |
| | கடை எண்.33 | 9000 | S.ராமநாதன் | - | - | - | - | 11700 | 11700 |

| வ. எண் | வணிக வளாகங்கள் | அரசு நிர்ணயத் தொகை தொகை | ஏலதாரர் பெயர் | முதல் ஏலம் | 2&3-வது ஏலம் | 4-வது ஏலம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை (ரூ.) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ.) |
| 6. | வார்டு எண்.5 கவுண்டம்பாளையம் பிரிவு ஒணாப்பாளையம் சாலை அசோக் நகர் கிழக்கு பகுதி கடை கடைகள் (16’x10’) | | | | | | | |
| | கடை எண். 9 | 7000 | D.சக்திவேல் | - | - | | 9200 | 9200 |

வரிசை எண்.4 –ல் கடை எண்.6 –ற்கு 6.2.2014-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் அரசு மதிப்ப ரூ.18000/- ஐ விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.18700/- திரு. R.ஸ்ரீதர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.5 உள்ள இனத்திற்கு கடை எண். 15-க்கு முதல் ஏலத்தில் திரு.A.R.கார்திகேயன் என்பவர் ரூ. 9500/- ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார். 6.2.2014-ம் தேதி நடைபெற்ற 4-வது ஏலத்திலஒருவரும் கலந்துகொள்ளவில்லை. எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.5 கடை எண்.18-ற்கு 6.2.2014-ம் தேதி நடைபெற்ற 4-வது ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயர்ந்தபட்சமாக ரூ.10000/-ற்கு திருமதி. M.அமுதா மின்ஏலம் கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.5 கடை எண்.32-ற்கு 6.2.2014-ம் தேதி நடைபெற்ற 4-வது ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.9000,-ஐ விட உயர்ந்தபட்சமாக ரூ.11000/- ற்கு திரு S.ராமநாதன் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.5 கடை எண்.33-ற்கு 6.2.2014-ம் தேதி நடைபெற்ற 4-வது ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.9000/-ஐ விட உயர்ந்தபட்சமாக ரூ.11700/- ற்கு திரு S.ராமநாதன் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

வரிசை எண்.6-ல் உள்ள இனத்திற்கு கடை எண்.9-ற்கு 6.2.2014-ம் தேதி நடைபெற்ற 4-வது ஏலத்தில் அரசு மதிப்பு ரூ.7000/-ஐ விட உயர்ந்தபட்சமாக ரூ.9200/-ற்கு திரு.D.சக்திவேல் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே ஒப்படைப்பு செய்யலாம்.

எனவே மேற்காணும் வணிக வளாகங்களை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு நிதிக்குழு தீர்மான எண்.229 நாள்.12.02.2014-ன்படி உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.12374/2013/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 414 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 43

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு 71ல் உள்ள புலியகுளம் திருமண மண்டபத்தை உதவி இயக்குநர் நில அளவை பதிவேடுகள் துறைக்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்வது- தொடர்பாக

பார்வை 1.உதவி இயக்குநர் நில அளவை பதிவேடுகள் துறை கோயம்புத்தூர்அவர்களின் கடிதம் நாள் 01.02.2014
2. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.241 நாள்.12.02.2014.

பார்வையில் காணும் கடிதத்தின்படி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பழைய கட்டிடங்களை இடித்து புதிய கட்டிடம் கட்டும் பணி நடைபெறுவதால் மேற்கூறிய நில அளவை பதிவேடுகள் துறை அலுவலக பயன்பாட்டிற்காக கோவை மாநகராட்சி வார்டு 71 புலியகுளம் மாநகராட்சி கல்யாண மண்டபத்தினை தற்காலிகமாக ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறும் கோவை மாநகராட்சியால் நிர்ணயம் செய்யும் வாடகைத்தொகைக்கான உரிய ஒப்பளிப்பு ஆணைகளை இத்துறை இயக்ககத்திலிருந்து பெற்று பட்டியலிட்டு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய மண்டபத்தின் மாத வாடகை ரூ 1,76,075,- என மாமன்ற தீர்மான எண் 275 நாள் 29.11.2012ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நில அளவை பதிவேடுகள் துறை அலுவலக பயன்பாட்டிற்காக தற்காலிகமாக ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.241 நாள்.12.02.2014-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.8800/12/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 415 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 44**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் – பொறியியல் பிரிவு – மேட்டுப்பாளையம் சாலையில் நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் அமைத்தல் – நிர்வாக அனுமதி – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு மேட்டுப்பாளையம் சாலையில் சாயிபாபாகாலனி சந்திப்பு முதல் வடக்காக கவுண்டம்பாளையம் வரை சாலை மைய தடுப்புகளின் மேல் அமைக்கப்பட்டிருந்த 43 எண்ணிக்கை குழல் மின் கம்பங்கள் 20 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டது. மேலும் 2010ஆம் ஆண்டு மேட்டுப்பாளையம் சாலையை விரிவுபடுத்தி நான்கு வழி சாலையாக NHAI மூலம் நெடுஞ்சாலைத்துறையினரால் சாலைப் பணி நடைபெற்ற சமயத்தில் மேற்காணும் கம்பங்கள் அகற்றப்பட்டன. தற்போது சாலைப்பணி முழுமையாக முடிவு பெற்று விட்டது. எனவே சாலையின் போக்குவரத்தை கருத்தில் கொண்டும் பொது மக்களின் பாதுகாப்பை கருதியும் மேட்டுப்பாளையம் சாலையின் நடுவில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

மேலும் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், துடியலூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் 1,5 கி.மீ நீளத்திற்கு 30 மீட்டர் இடைவெளியில் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளுக்கு இணையான 120 வாட்ஸ் நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் ( Galvanized spiral pole) சந்தை நிலவரப்படி உள்ள விலைக்கும், கேபிள் மற்றும் நிறுவுதல் பணிகளை பொதுப்பணி துறையின் தரப்படுத்தப்பட்ட விலைக்கும் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.74.90 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.11586 /2013 / எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 416 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 45**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் – பொறியியல் பிரிவு – மேட்டுப்பாளையம் சாலையில் நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் அமைத்தல் – நிர்வாக அனுமதி – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு மேட்டுப்பாளையம் சாலையில் கவுண்டம்பாளையம் முதல் வெள்ளக்கிணறு பிரிவு சந்திப்பு வரை சாலையின் இரு புறங்களிலுமிருந்த மின் கம்பங்கள் 20 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டது. மேலும் 2010ஆம் ஆண்டு மேட்டுப்பாளையம் சாலையை விரிவுபடுத்தி நான்கு வழி சாலையாக NHAI மூலம் நெடுஞ்சாலைத்துறையினரால் சாலைப் பணி நடைபெற்ற சமயத்தில் மேற்காணும் கம்பங்கள் அகற்றப்பட்டன. தற்போது சாலைப்பணி முழுமையாக முடிவு பெற்று விட்டது. எனவே சாலையின் போக்குவரத்தை கருத்தில் கொண்டும் பொது மக்களின் பாதுகாப்பை கருதியும் மேட்டுப்பாளையம் சாலையின் நடுவில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

மேலும் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், துடியலூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் 1,5 கி.மீ நீளத்திற்கு 30 மீட்டர் இடைவெளியில் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளுக்கு இணையான 120 வாட்ஸ் நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் ( Galvanized spiral pole) சந்தை நிலவரப்படி உள்ள விலைக்கும், கேபிள் மற்றும் நிறுவுதல் பணிகளை பொதுப்பணி துறையின் தரப்படுத்தப்பட்ட விலைக்கும் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.74.90 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.11584/2013 / எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 417 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 46**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் – பொறியியல் பிரிவு – மேட்டுப்பாளையம் சாலையில் நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் அமைத்தல் – நிர்வாக அனுமதி – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு மேட்டுப்பாளையம் சாலையில் வெள்ளக்கிணறு பிரிவு சந்திப்பு முதல் துடியலூர் சந்திப்பு வரை சாலையின் இரு புறங்களிலுமிருந்த மின் கம்பங்கள் 20 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டது. மேலும் 2010ஆம் ஆண்டு மேட்டுப்பாளையம் சாலையை விரிவுபடுத்தி நான்கு வழி சாலையாக NHAI மூலம் நெடுஞ்சாலைத்துறையினரால் சாலைப் பணி நடைபெற்ற சமயத்தில் மேற்காணும் கம்பங்கள் அகற்றப்பட்டன. தற்போது சாலைப்பணி முழுமையாக முடிவு பெற்று விட்டது. எனவே சாலையின் போக்குவரத்தை கருத்தில் கொண்டும் பொது மக்களின் பாதுகாப்பை கருதியும் மேட்டுப்பாளையம் சாலையின் நடுவில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

மேலும் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளான கவுண்டம்பாளையம், துடியலூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் 1,5 கி.மீ நீளத்திற்கு 30 மீட்டர் இடைவெளியில் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளுக்கு இணையான 120 வாட்ஸ் நவீன LED விளக்குகளுடன் கூடிய பறவை இறகு வடிவமுள்ள அலங்கார மின் கம்பங்கள் ( Galvanized spiral pole) சந்தை நிலவரப்படி உள்ள விலைக்கும், கேபிள் மற்றும் நிறுவுதல் பணிகளை பொதுப்பணி துறையின் தரப்படுத்தப்பட்ட விலைக்கும் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.74.90 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.11585/2013 / எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 418 நாள் 17.02.2014</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 47**

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – 27.03.2014 முதல் 29.03.2014 முடிய "**Earth Hour City Challenge 2014**" அமைப்பினரால் நடத்தப்பட உள்ள கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக.

**பார்வை** Dr. Sejal Worah, Programme Director, WWF, நியுடெல்லி அவர்களின் கடித நாள். 12.02.2014.

--------

பார்வையில் காணும் கடிதத்தில் கனடா நாட்டின் வான்கூவர் நகரத்தில் 27.03.2014 முதல் 29.03.2014 வரை **Earth Hour City Challenge 2014** அமைப்பினரால் நடத்தப்பட உள்ள கருத்தரங்கில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் சுற்றுப்புற சூழல் தொடர்பாக பல்வேறு மாநகரங்களில் எடுக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கு நடத்தும் அமைப்பினரால் 14 நாடுகளில் உள்ள 163 மாநகரங்களில் சுற்றுச்சுழல் சம்பந்தமாக செயல்படுத்தப்பட்ட திட்டங்களை ஆய்வு செய்து ஒரு நாட்டிற்கு ஒரு மாநகரம் என்ற அடிப்படையில் 14 மாநகரங்கள் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் இந்தியாவில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் குறைந்த அளவிலான கார்பனை வெளிப்படுத்தும் சோலார் மின் திட்டம், மின்சேமிப்புத் திட்டம், மரங்கள் நடுதல், சோலார் வாட்டர் ஹீட்டர் அமைத்தல் மற்றும் கழிவிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்தல் போன்ற சுற்றுச் சூழலை மேம்படுத்தும் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக இம்மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலம், நமது மாநகரில் சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்கென செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை இம்மாநகராட்சியினைப் போன்று தேர்வு செய்யப்பட்டுள்ள இதர 13 மாநகரங்களின் பிரதிநிதிகளுடன் பகிர்ந்து கொள்ளவும், அதே போன்று அம்மாநகரங்களில் செயல்படுத்தப்பட்ட சுற்றுச்சூழலுக்கான திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஏதுவாக அமையும். இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் ஒருவருக்கான பயணச் செலவு மட்டும் WWF (World Wide Fund) அமைப்பால் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஆணையாளருக்கான பயணச் செலவினை இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

